(எட்டாவது பாராளுமன்றம் - மூன்றாவது கூட்டத்தொடர்)

இல. 3(10).]

# பாராளுமன்றம்

## 3 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2019 நவெம்பர் 08 வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது

## 2019 திசெம்பர் 03, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

31/ '18

கௌரவ ஹேஷா விதானகே,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 1978 ஆம் ஆண்டுடன் ஆரம்பமான முதலாவது பாராளுமன்றத்திலிருந்து எட்டாவது பாராளுமன்றம் வரை ஒவ்வொரு பாராளுமன்றம் தொடர்பிலும் ஏற்படுத்தப்பட்ட அமைச்சரவைகளில் இருந்த அமைச்சரவை, இராஜாங்க மற்றும் பிரதி அமைச்சர்களின் எண்ணிக்கை தனித்தனியே யாது என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு அமைச்சரவையிலும் இருந்த பெண் அமைச்சர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iii) ஒவ்வொரு அமைச்சரவையிலும் இருந்த பெண் அமைச்சர்களின் எண்ணிக்கையானது, குறித்த அமைச்சரவையில் இருந்த மொத்த அமைச்சர்களின் எண்ணிக்கையின் நூற்றுவீதமாக எவ்வளவு என்பதையும்;

(iv) நாட்டின் தற்போதைய பெண்கள் சனத்தொகையின் சதவீதத்திற்கு ஏற்றவாறு நியாயமான பிரதிநிதித்துவம் அமைச்சரவையில் பெண்களுக்குக் கிடைத்துள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

91/ '18

கௌரவ தயாசிறி ஜயசேக்கர,— கைத்தொழில், வாணிப அலுவல்கள், நீண்டகாலமாக இடம்பெயர்ந்த நபர்களின் மீள்குடியேற்றம், கூட்டுறவுத்துறை அபிவிருத்தி, தொழில் பயிற்சி மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இந்நாட்டுக்கு தகரத்தில் அடைத்த மீனை இறக்குமதி செய்யும் நாடுகள் யாவை;

(ii) மேற்படி தகரத்தில் அடைத்த மீனை இறக்குமதி செய்யும் இந்நாட்டுக் கம்பனிகள் யாவை;

(iii) 2018 ஆம் ஆண்டில் நுகர்வுக்கு ஏற்புடையதல்லாத தகரத்தில் அடைத்த மீன்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ள சந்தர்ப்பங்கள் யாவை;

(iv) மேற்படி தகரத்தில் அடைத்த மீனை இறக்குமதி செய்த கம்பனிகள் மற்றும் அளவுகள் வெவ்வேறாக யாது;

(v) மேற்படி இறக்குமதி நடவடிக்கைகளுக்கு நுகர்வோர் அதிகாரசபையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதா;

(vi) இறக்குமதி செய்யப்பட்ட நுகர்வுக்கு ஏற்புடையதல்லாத தகரத்தில் அடைத்த மீன்கள் தொடர்பில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை;

(vii) இதற்கு முன்னரும் நுகர்வுக்கு ஏற்புடைதல்லாத தகரத்தில் அடைத்த மீன்கள் இறக்குமதி செய்யப்பட்டிருப்பின், அச்சந்தர்ப்பங்களில் இறக்குமதி செய்த கம்பனிகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

147/ '18

கௌரவ சமிந்த விஜேசிறி,— கைத்தொழில், வாணிப அலுவல்கள், நீண்டகாலமாக இடம்பெயர்ந்த நபர்களின் மீள்குடியேற்றம், கூட்டுறவுத்துறை அபிவிருத்தி, தொழில் பயிற்சி மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) ஊவா மாகாணத்தில் அமைந்துள்ள உள்நாட்டுப் பால்மா தொழிற்சாலைகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) அந்தத் தொழிற்சாலைகளின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவையென்பதையும்,

(iii) நல்லாட்சி அரசு ஆட்சி அதிகாரத்திற்கு வந்ததன் பின்னர் இதுவரை அந்த தொழிற்சாலைகளின் உற்பத்தி அளவு ஒவ்வொரு வருடத்திற்கமைய எவ்வளவென்பதையும்;

(iv) தற்போது ஊவா மாகாணத்தின் உள்நாட்டுப் பால்மா உற்பத்தித் தொழிற்சாலைகள் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அமைச்சு எடுக்கும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

209/ '18

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2017ஆம் ஆண்டில்,

(i) புகையிரதத்தைப் பயன்படுத்திய பயணிகளின் எண்ணிக்கை;

(ii) பயணிகள் போக்குவரத்தினால் கிடைத்த வருமானம்;

(iii) அச்சிடப்பட்ட புகையிரத பயணச் சீட்டுக்களின் எண்ணிக்கை;

(iv) புகையிரத பயணச் சீட்டுக்களை அச்சிடுவதற்காக செலவிடப்பட்ட தொகை;

யாது என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) பயணிகள் போக்குவரத்திற்காக நாளொன்றில் ஈடுபடுத்த வேண்டிய புகையிரத பயணச் சுற்றுக்களின் எண்ணிக்கை;

(ii) பொதுவாக நாளொன்றில் மேற்கொள்ளப்படும் பயணச் சுற்றுக்களின் எண்ணிக்கை;

யாது என்பதையும் அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

269/ '18

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மொணறாகல மாவட்டத்தின் மெதகம பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள அடையாளம் காணப்பட்ட தொல்பொருளியல் இடங்களின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் பெயர்கள் யாவை;

(ii) அப்பிரிவில் அகழ்வுகள் மேற்கொள்ளப்படாத எனினும், அடையாளம் காணப்பட்ட தொல்பொருளியல் இடங்கள் அமைந்துள்ளனவா;

(iii) ஆமெனில், அவை யாவை;

(iv) மேற்படி பிரிவில் அமைந்துள்ள தொல்பொருளியல் முக்கியத்துவம் வாய்ந்த ரஜமகா விகாரைகளின் எண்ணிக்கை எவ்வளவு; அது பற்றிய அறிக்கையொன்றைச் சமர்ப்பிப்பாரா;

(v) மேற்படி தொல்பொருளியல் இடங்களின் பேணல் நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள ஒதுக்கீடுகள் பற்றிய முழுமையான அறிக்கையொன்றைச் சமர்ப்பிப்பாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

343/ '18

கௌரவ இஷாக் ரஹுமான்,— தேசிய ஒருமைப்பாடு, அரசகரும மொழிகள், சமூக மேம்பாடு மற்றும் இந்து சமய அலுவலகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கெக்கிராவ நகரில் அமைந்துள்ள இந்து ஆலயம் மிகப் பழமையானதும் சேதமடைந்த நிலையிலும் காணப்படுகின்றதென்பதை அறிவாரா என்பதையும்;

(ii) இன்றளவில் மந்தகதியில் இடம்பெறும் மறுசீரமைப்பு பணிகளை துரிதமாக மேற்கொண்டு இந்த ஆலயத்தை வழிபாட்டு நடவடிக்கைகளுக்கு இந்து மத அடியார்களுக்கு வழங்கப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

433/ '19

கௌரவ கனக ஹேரத்,— போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) சிவில் விமான சேவை அதிகாரசபை ஊழியர்களின் எண்ணிக்கை யாது;

(ii) நிரந்தர ஊழியர்களின் எண்ணிக்கை மற்றும் ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றும் ஊழியர்களின் எண்ணிக்கை யாது;

(iii) சிவில் விமானச் சேவைகள் அதிகாரசபையின், பணிப்பாளர் நாயகம், மேலதிக பணிப்பாளர் நாயகம், பிரதி பணிப்பாளர் நாயகங்கள் மற்றும் பிரிவுகளின் தலைமைப் பணிப்பாளர்களது வயதெல்லைகள் வெவ்வேறாக யாது;

(iv) இந்த அதிகாரசபையில் உள்ள ஆலோசகர்களின் எண்ணிக்கை மற்றும் அவர்களது வயதெல்லைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) சிவில் விமானசேவை அதிகாரிகள் ஓய்வுபெறுகையில், வெற்றிடமாகும் குறிப்பிட்ட வெற்றிடங்களுக்கு, தகைமை படைத்த இரண்டாம் நிலை உத்தியோகத்தர்கள் குழுவொன்றை ஈடுபடுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதா என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

455/ '19

கௌரவ ஆனந்த அளுத்கமகே,— நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி மற்றும் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) மத்திய அதிவேக நெடுஞ்சாலையில், குருநாகலையிலிருந்து கலகெதர வரையில் நிர்மாணிக்கப்படும் பகுதியின்,

(i) ஒட்டுமொத்த தூரம்;

(ii) மதிப்பீடு செய்யப்பட்டுள்ள மொத்தச் செலவு;

(iii) உட்பிரவேச மற்றும் வெளியேறும் வாயில்கள் அமைக்கப்படும் இடங்கள்;

(iv) நிர்மாணப்பணியை ஆரம்பிப்பதற்கும் நிறைவுசெய்வதற்கும் உத்தேசிக்கப் பட்டுள்ள திகதி;

யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) அதிவேக நெடுஞ்சாலையின் மேற்குறிப்பிட்ட பகுதிக்காக இதுவரையில்,

(i) சுவீகரிக்கப்பட்டுள்ள காணிகளின் அளவு;

(ii) செலுத்தப்பட்டுள்ள மொத்த நஷ்டஈட்டுத் தொகை;

(iii) செலுத்தப்படவுள்ள நஷ்டஈட்டுத் தொகை;

எவ்வளவு என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) மேற்படி அதிவேக நெடுஞ்சாலையில் நிர்மாணப் பணிகளை துரிதப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வாரா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

467/ '19

கௌரவ அசோக்க பிரியந்த,— உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) புத்தளம் மாவட்டத்தில் அமைந்துள்ள உள்ளூராட்சி நிறுவனங்களின் எண்ணிக்கை யாது;

(ii) அவற்றின் பெயர்கள் யாவை;

(iii) இந்த ஒவ்வோர் உள்ளூராட்சி நிறுவனத்தினாலும் நிர்வகிக்கப்படுகின்ற சிறுவர் பூங்காக்களின் எண்ணிக்கை யாது;

(iv) அவற்றின் பெயர்கள் யாவை;

(v) 2010 ஆம் ஆண்டிலிருந்து இற்றைவரை இந்த ஒவ்வொரு சிறுவர் பூங்காவையும் அபிவிருத்தி செய்வதற்காக அமைச்சினால் வழங்கப்பட்டுள்ள வருடாந்த ஏற்பாடுகள் வெவ்வேறாக எவ்வளவு;

(vi) இந்த சிறுவர் பூங்காக்களை தொடர்ந்தும் அபிவிருத்தி செய்வதற்காக அமைச்சு தற்போது மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளும் எதிர்காலத்தில் மேற்கொள்ள உள்ள நடவடிக்கைகளும் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

504/ '19

கௌரவ ஜயந்த சமரவீர,— வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) அனுராதபுரம் மாவட்டத்திற்குரிய மத்தியம நுவர கம்பலாத்த பிதேசத்தில் நிர்மாணிக்கப்பட்ட வீடமைப்புத்திட்டத்தில் வீடுகள் கையளிக்கப்பட்ட அடிப்படை யாதென்பதையும்;

(ii) கையளிக்கபட்ட வீடுகளைப் பெற்றுக்கொண்ட ஒவ்வொரு நபரினதும் பெயர், வீட்டு இலக்கம், வீட்டுப்பயனாளி அரச உத்தியோத்தரா, ஓய்வு பெற்ற அரச உத்தயோத்தரா என்பதையும் அறியத்தருவாரா;

(iii) வீடமைப்புத்திட்டமானது பிரதேசத்திலுள்ள காட்டு யானைகள் பயணிக்கும் யானைக் கடவைக்கு தடயேற்படும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது என்பதை அறிவாரா;

(iv) வீட்டுப்பயனாளிகளின் உயிர்ப் பாதுகாப்பு தொடர்பில் யானை வேலியொன்றை அமைப்பதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதா;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) வீடமைப்புத் திட்டத்தினை திறந்து வைத்தமை தொடர்பான விளம்பர நடவடிக்கைகளுக்காக செலவு செய்த பணத்தொகை எவ்வளவு என்பதையும்;

(ii) வீடமைப்புத் திட்டத்தினை திறந்து வைப்பதற்காக அமைக்கப்பட்ட நினைவுப் பலகைக்காக செலுத்தப்பட்டுள்ள பணம் எவ்வளவு;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

518/ '19

கௌரவ இந்திக அநுருத்த ஹேரத்,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) 2014.01.01 ஆம் திகதி தொடக்கம் 2015.01.01 ஆம் திகதி வரை இலங்கைப் பிரசைகளால் அரச வங்கிகளிலிருந்து பெறப்பட்டுள்ள மொத்த அடகுக்கடன்களின் எண்ணிக்கை யாது;

(ii) அவற்றில் தங்கநகைகளை அடகுவைத்து பெறப்பட்டுள்ள கடனின் அளவு யாது;

(iii) தங்கநகைகளை அடகுவைத்து ரூபா இரண்டு இலட்சத்தைவிடக் குறைவாக கடன் பெற்றுள்ள பெண்கள் மற்றும் ஆண்களின் எண்ணிக்கை தனித்தனியாக எவ்வளவு;

(iv) மேலே (i) இல் குறிப்பிட்ட கடனின் அளவு அக்காலப்பகுதிக்குள் விநியோகித்துள்ள ஒட்டுமொத்த கடனின் சதவீதமாக எவ்வளவு;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

619/ '18

கௌரவ மஹிந்தானந்த அழுத்கமகே,— நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி மற்றும் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்குச் சொந்தமான கண்டி மாவட்டத்தின், கம்பளை - தொலொஸ்பாகே வீதியை இரு ஓடு பாதைகளாக விரிவாக்கும் பொருட்டு 2012 ஆம் ஆண்டு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு தற்போது குருந்துவத்தை தொடக்கம் வெலிகந்த வரையிலான 7 கிலோமீட்டர் தூரம் காப்பற் இடப்பட்டு வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன என்பதையும்;

(ii) 2015 ஜனவரி தொடக்கம் மூன்றரை வருட காலப்பகுதியில் இந்த வீதியில் எதுவித வேலைகளும் இடம்பெறவில்லை என்பதையும்;

ஏற்றுக் கொள்வாரா?

(ஆ) பெருமளவிலான வாகனங்களும் பெரும் எண்ணிக்கையிலான மக்கள் பயன்படுத்துகின்ற இந்த வீதியில் 4 கிலோமீட்டர்களுக்காக நிதி ஒதுக்கீடுகளை மேற்கொண்டு வேலைகளை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

655/ '18

கௌரவ சுசந்த புஞ்சிநிலமே,— நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி மற்றும் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) திருகோணமலை - கண்டி வீதியின் 6 ஆம் கட்டை தொடக்கம் திருகோணமலை - அனுராதபுரம் வீதியில் கிண்ணியா வரை ஓடுகின்ற திருகோணமலை வெளிச்சுற்றுவட்டப் பாதையின் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு பல வருடங்கள் கடந்துள்ளன என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) 2013.07.18 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் 6 ஒட்டப்பாதைகள் வரை அதிகரிக்கக்கூடிய வகையில் 4 ஓடு பாதைகளுடன் இந்த வீதி நிர்மாணிக்கப்படுமா என்பதையும்;

(ii) 2015 சனவரி மாதமாகின்ற வேளையிலும் வீதி வெட்டப்பட்டு சரளைக் கற்கள் இடப்பட்டு தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் இன்று வரையும் கற்களைப் பரவி காபட் இடுவதற்கு முடியாது போனமைக்கான காரணம் யாதென்பதையும்;

(iii) தற்போது நிர்மாணப் பணிகளுக்குப் பொறுப்பான ஒப்பந்தகாரர் கம்பனி யாதென்பதையும்;

(iv) இந்த வீதிக்கான நிர்மாணப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டு கையளிக்கப்பட வேண்டிய திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

676/ '19

கௌரவ சந்திம கமகே,— உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி ஒதுக்கீடுகளின் கீழ் 368 இலட்சம் ரூபா மதிப்பீடு செய்யப்பட்டு NELSIP கருத்திட்டத்தின் மூலம் கெக்கிராவ விளையாட்டு மைதானம் அபிவிருத்தி செய்யப்பட்டது என்பதையும்;

(ii) கருத்திட்டத்தில் இடம்பெற்ற முறைகேடுகளின் காரணமாக கருத்திட்டத்தை கைவிட நேர்ந்தது என்பதையும்;

(iii) கெக்கிராவ பிரதேச இணைப்பாக்கக் குழுவினால் அனுராதபுரம் உள்ளூராட்சி ஆணையாளர் மூலம் மற்றும் NELSIP கருத்திட்டத்தின் பணிப்பாளரின் மூலம் தரக் கட்டுப்பாடு, தரநியமம் மற்றும் செலவிடப்படுகின்ற தொகை தொடர்பாக அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்குமாறு கட்டளையிடப்பட்டுள்ள போதிலும் அத்தகையதொரு அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை என்பதையும்;

(iv) மேற்படி கருத்திட்டத்தில் சுமார் 35 இலட்சம் ரூபாவிலான ஊழல் மோசடி இடம் பெற்றுள்ளது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) உள்ளூராட்சி ஆணையாளர், பிரதேச சபைத் தவிசாளர், உப தவிசாளர் மற்றும் பிரதேச சபை செயலாளர் என்போரின் தேவையின் அடிப்படையில் மேற்படி விளையாட்டு மைதானத்தினை பொதுமக்களின் பயன்பாட்டுக்காக வழங்குவதற்கும் விசாரணை நடவடிக்கைகள் முடிவுறுத்தப்படுவதற்கு முன்னர் இசைக் கச்சேரி ஒன்றினை நடாத்துவதற்கும் பயன்படுத்தப்பட்டது என்பதையும்;

(ii) இச்செயன் முறையின் மூலம் இடம்பெற்ற ஊழல் மோசடிகளை மூடி மறைப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன என்பதையும்;

அவர் அறிவாரா?

(இ) விசாரணை நடவடிக்கைகளை துரிதப்படுத்துவதற்கும் விளையாட்டு மைதானத்தினை பொது மக்களுக்கு ஒப்படைக்கும் வரை பயன்படுத்தாமல் தாமதப்படுத்துவதற்கும் கட்டளையிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

688/ '18

கௌரவ பிமல் ரத்நாயக்க,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2010 முதல் 2017 ஆம் ஆண்டு வரை கொழும்பு, காலி, மாத்தறை, கண்டி, குருணாகல், யாழ்ப்பாணம் மற்றும் கம்பஹா மாவட்டங்களின் தேசிய பாடசாலைகளின்;

(i) 5 ஆம் வகுப்பு புலமைப்பரிசில் பரீட்சையின் வெட்டுப்புள்ளி யாதென்பதையும்;

(ii) புலமைப்பரிசில் பரீட்சையின் பெறுபேறுகளின் பிரகாரம் 6 ஆம் ஆண்டுக்காக சேர்த்துக்கொள்ளப்பட்ட பிள்ளைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) 5 மற்றும் 6 ஆம் ஆண்டுகளின் சமாந்தர வகுப்புகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) 6 ஆம் ஆண்டுக்கு புலமைப்பரிசில் பெறுபேறுகளின் கீழ் சேர்த்துக்கொள்ளப்படாத ஆரம்பப் பிரிவிலிருந்து வந்துள்ள மாணவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(v) 6 ஆம் ஆண்டு மொத்த மாணவர்கள் எண்ணிக்கையில் புலமைப்பரிசில் பெறுபேறுகளின் கீழ் சேர்ந்துள்ள மாணவர்களின் சதவீதம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பார?

(ஆ) இன்றேல், ஏன்?

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

அற்றோணித் தத்துவம் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவர்,— அரசியலமைப்பின் கீழ் பெறுகை வழிகாட்டுதல்கள்,— இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 156இ(1) உறுப்புரையின் பிரகாரம் தேசிய பெறுகை ஆணைக்குழுவினால் ஆக்கப்பட்டு, 2019 ஒக்டோபர் 12 ஆம் திகதிய 2144/68 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.11.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான பெறுகை வழிகாட்டுதல்கள் - 2019 அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

நிதி அமைச்சர்,— உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 1),— 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் உற்பத்தி வரி தொடர்பில் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 யூலை 10 ஆம் திகதிய 2131/29 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.11.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

நிதி அமைச்சர்,— உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 2),— 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் உற்பத்தி வரி தொடர்பில் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 ஆகஸ்ட் 9 ஆம் திகதிய 2135/55 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.11.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

நிதி அமைச்சர்,— உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 3),— 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் உற்பத்தி வரி தொடர்பில் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 ஆகஸ்ட் 10 ஆம் திகதிய 2135/68 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.11.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

நிதி அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 1),—2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீடு தொடர்பில் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 ஆகஸ்ட் 01 ஆம் திகதிய 2134/44 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.11.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

நிதி அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 2),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீடு தொடர்பில் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 ஆகஸ்ட் 08 ஆம் திகதிய 2135/54 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.11.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

நிதி அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 3),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீடு தொடர்பில் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 ஆகஸ்ட் 10 ஆம் திகதிய 2135/67 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.11.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

நிதி அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 4),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீடு தொடர்பில் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 செப்டெம்பர் 07 ஆம் திகதிய 2139/74 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.11.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

நிதி அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 5),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீடு தொடர்பில் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 செப்டெம்பர் 10 ஆம் திகதிய 2140/20 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.11.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

நிதி அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 6),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீடு தொடர்பில் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 செப்டெம்பர் 30 ஆம் திகதிய 2143/3 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.11.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

நிதி அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 7),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீடு தொடர்பில் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 ஒக்டோபர் 02 ஆம் திகதிய 2143/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.11.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

நிதி அமைச்சர்,— வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 7 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 29 ஆம் பிரிவின் கீழ், அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களினால் மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டுச் செலாவணியிலான மூலதனக் கொடுக்கல் வாங்கல்களின் வகைகள் தொடர்பில் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 ஒக்டோபர் 17 ஆம் திகதிய 2145/49 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.11.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

நிதி அமைச்சர்,— சுங்கக் கட்டளைச் சட்டத்தின் கீழ் தீர்மானம் (இல. 1),— (235 ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழான இறக்குமதித் தீர்வை வரி தொடர்பில், நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019.11.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட தீர்மானம் அங்கீகரிக்கப்படுமாக.

(2019 செப்டெம்பர் 10 ஆம் திகதி 2140/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகை)

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

நிதி அமைச்சர்,— சுங்கக் கட்டளைச் சட்டத்தின் கீழ் தீர்மானம் (இல. 2),— (235 ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழான இறக்குமதித் தீர்வை வரி தொடர்பில், நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019.11.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட தீர்மானம் அங்கீகரிக்கப்படுமாக.

(2019 செப்டெம்பர் 27 ஆம் திகதி 2142/87 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகை)

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சர்,— குடியியல் வான்செலவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2010 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க குடியியல் வான்செலவுச் சட்டத்தின் 66 மற்றும் 69 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 117 ம் பிரிவின் கீழ் ஆளணியினருக்கு மற்றும் பயிற்சி நிறுவனங்களுக்கு உரிமமளித்தல் தொடர்பில் போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2018 யூலை 3 ஆம் திகதிய 2078/22 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.11.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*

அபிவிருத்தி உபாயமுறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 4(3) மற்றும் 14 ஆம் பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 ஒக்டோபர் 22 ஆம் திகதிய 2146/23 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை மூலம் அச்சுப் பிழைகள் திருத்தப்பட்ட 2018 ஒக்டோபர் 03 ஆம் திகதிய 2143/36 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.11.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

அமைச்சரவை அந்தஸ்த்தற்ற டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சர்,— இலத்திரனியல் பரிமாற்றல் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.1),— 2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க இலத்திரனியல் பரிமாற்றல் சட்டத்தின் 8 (2) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 24 ஆம் பிரிவின் கீழ் பிறப்பு மற்றும் இறப்பினை பதிவு செய்வதற்கான விடயப் பொறுப்பு அமைச்சரின் செயலாளரின் விதப்புரை தொடர்பான இ-சனத்தொகை இடாப்பு தொடர்பில் தொலைத்தொடர்புகள் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2014 மே 29 ஆம் திகதிய 1864/44 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.11.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*

அமைச்சரவை அந்தஸ்த்தற்ற டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சர்,— இலத்திரனியல் பரிமாற்றல் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.2),— இலத்திரனியல் பரிமாற்றல் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க இலத்திரனியல் பரிமாற்றல் சட்டத்தின் 8(2) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 24 ஆம் பிரிவின் கீழ் பிறப்பு மற்றும் இறப்பினை பதிவு செய்வதற்கான விடயப் பொறுப்பு அமைச்சரின் செயலாளரின் விதப்புரை தொடர்பான இ - சனத்தொகை இடாப்பு தொடர்பில் டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 மார்ச் 14 ஆம் திகதிய 2114/27 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.11.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*

அமைச்சரவை அந்தஸ்த்தற்ற டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சர்,— இலத்திரனியல் பரிமாற்றல் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.3),— 2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க இலத்திரனியல் பரிமாற்றல் சட்டத்தின் 8 (2) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 24 ஆம் பிரிவின் கீழ் ஆட்களைப் பதிவு செய்வதற்கான விடயப் பொறுப்பு அமைச்சரின் செயலாளரின் விதப்புரை தொடர்பான இலத்திரனியல் முறையிலான ஆட்பதிவு தொடர்பில் டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 மார்ச் 21 ஆம் திகதிய 2115/42 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.11.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

கம்பெனிகள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

மரண தண்டனையை இல்லாதொழித்தல் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

# 2019 திசெம்பர் 04, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

22/ '18

கௌரவ ஹேஷா விதானகே,— புத்தசாசன மற்றும் வடமேல் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் இது வரை பதிவுசெய்யப்பட்டுள்ள அறநெறிப் பாடசாலைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்படுகின்ற பிரதிப் பயன்கள் யாவை என்பதையும்;

(iii) அறநெறிக் கல்வியை மேம்படுத்த மேற்படி தன்னார்வ அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்காக திட்டமிடப்பட்டுள்ள எதிர்கால வேலைத்திட்டங்கள் யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

92/ '18

கௌரவ தயாசிறி ஜயசேகர,— வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2015 ஆம் ஆண்டிலிருந்து இற்றைவரை அழிக்கப்பட்டுள்ள தொல்லியல் இடங்களின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி இடங்களின் பெயர்களை குறிப்பிடுவாரா;

(iii) மேற்படி தொல்லியல் இடங்களை அழிப்பதற்கான காரணங்கள் யாவை;

(iv) சம்பந்தப்பட்ட தொல்லியல் இடங்களை அழித்த ஆட்கள் இனங்காணப்பட்டுள்ளனரா;

(v) அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள தண்டனைகள் யாவை;

(vi) இனங்காணப்படாத ஆட்களால் அழிக்கப்பட்டுள்ள தொல்லியல் இடங்களின் எண்ணிக்கை யாது;

(vii) நாடொன்றின் வரலாற்றுப் பெருமையை பாதுகாக்கின்ற தொல்லியல் இடங்கள் அழிக்கப்படுவதற்கு எதிராக எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படுகின்ற நடவடிக்கைகளை குறிப்பிடுவாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல் ஏன்?

346/ '18

கௌரவ இஷாக் ரஹுமான்,— உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) அநுராதபுரம் மாவட்டத்தில் மஹாவலி H வலயத்தில் அமைந்துள்ள கல்னேவ பேரூந்துத் தரிப்பிடம் மிகவும் பழுதடைந்த நிலையில் காணப்படுகின்றதென்பதை அறிவாரா என்பதையும்;

(ii) அது பாவனையாளர் மக்கள் பயன்படுத்தக்கூடிய வகையில் திருத்தப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

434/ '19

கௌரவ கனக ஹேரத்.— சுற்றுலாத்துறை அபிவிருத்தி, வனசீவராசிகள் மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) பின்னவல யானைகள் சரணாலயத்தை பார்வையிடுவதற்காக ஏராளமான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகைதருகிறார்கள் என்பதையும், இந்த நிறுவனத்தினால் தேசிய மிருகக்காட்சிசாலைகள் திணைக்களத்துக்கு அதிகூடிய வருமானம் கிடைக்கப்பெறுகிறது என்பதையும் அவர் அறிவாரா;

(ii) 2015 முதல் 2018 ஆம் ஆண்டு வரையில் பின்னவல யானைகள் சரணாலயத்தைப் பார்வையிடுவதற்காக வருகை தந்துள்ள வெளிநாட்டு சுற்றுலாப்பயணிகளின் எண்ணிக்கை ஒவ்வொரு காலாண்டின்படி வெவ்வேறாக யாது;

(iii) 2015 முதல் 2018 ஆம் ஆண்டு வரையில் இதன் மூலம் கிடைக்கப்பெற்ற வருமானம் ஒவ்வொரு வருடத்துக்கும் காலாண்டுக்கும் வெவ்வேறாக யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) பின்னவல யானைகள் சரணாலயத்தைப் பார்வையிடுவதற்காக வருகை தரும் சுற்றுலாப்பயணிகளுக்கு, யானைக் குட்டிகளுக்கு பால் ஊட்டுவதற்காக வழங்கப்பட்ட வாய்ப்பு தற்போது நிறுத்தப்பட்டிருப்பின் அதற்கான காரணம் யாது;

(ii) இதன் காரணமாக நிறுவனத்துக்கு வருடாந்தம் ஏற்படும் நட்டம் யாது;

(iii) இலங்கைக்கு பெறுமதிமிக்க ஒரு வளமாகக் காணப்படும் பின்னவல யானைகள் சரணாலயத்தை மேம்படுத்துவதற்காக அரசாங்கம் ஏதேனும் நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தவுள்ளதா;

(iv) ஆமெனில், குறிப்பிட்ட நடவடிக்கை யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

608/ '18

கௌரவ ஆனந்த அலுத்கமகே,— கைத்தொழில், வாணிப அலுவல்கள், நீண்டகாலமாக இடம்பெயர்ந்த நபர்களின் மீள்குடியேற்றம், கூட்டுறவுத்துறை அபிவிருத்தி, தொழில் பயிற்சி மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) கைத்தொழில் அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான,

(i) இலங்கை கைத்தொழில் பேட்டைகளின் எண்ணிக்கை;

(ii) நில அலகுகளின் எண்ணிக்கை;

(iii) கைத்தொழில்பேட்டைகளில் இயங்கிவருகின்ற தொழிற்சாலைகளின் எண்ணிக்கை;

(iv) கைத்தொழில் பேட்டைகளில் தொழில்புரிகின்றவர்களின் எண்ணிக்கை;

என்பவற்றை தனித்தனியாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) 2017 ஆண்டில் கைத்தொழில் அபிவிருத்திச் சபையினால் மத்திய மாகாணத்திற்காக,

(i) சுயதொழில் மேம்பாட்டுக்காக மேற்கொள்ளப்பட்ட நிகழ்ச்சிகள் ;

(ii) மேற்படி நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்ட இடங்கள்;

(iii) வழங்கப்பட்டுள்ள உபகரணங்கள்;

(iv) நன்மைபெறுனர்கள் தெரிவுசெய்யப்பட்ட அடிப்படை;

(v) மேற்கொள்ளப்பட்ட தொழில்நுட்ப பயிற்சி நிகழ்ச்சிகள்;

யாவை என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) நிகழ்காலத்தில் இணையத்தளத்தின் ஊடாக இலத்திரனியல் தொழில்முயற்சிகளை மேற்கொள்ளும் ஆற்றல் கிராமிய பிரதேசங்களில் வசிக்கின்ற ஆட்களுக்கும் திறந்ததாக உள்ளபோதிலும் அதற்கு அவசியமான அறிவு போதுமான அளவில் வழங்கப்படவில்லை என்பதை ஏற்றுக்கொள்கிறாரா;

(ii) இந்த அறிவினை முறைசார்ந்தவகையில் வழங்க நடவடிக்கை எடுப்பாரா;

என்பதையும் அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

620/ '18

கௌரவ மஹிந்தானந்த அலுத்கமகே,— நெடுஞ்சாலைகள், வீதிகள் அபிவிருத்தி மற்றும் பெற்றோலிய வள அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) நாவலபிட்டிய நகர அபிவிருத்திக் கருத்திட்டத்தின் கீழ் நாவலபிட்டிய நகரின் வாகன நெரிசலை குறைக்கும் நோக்கில் வீதிகள் அபிவிருத்தி அதிகாரசபையினால் 300 இலட்சம் ரூபாய் செலவில் நாவலபிட்டிய நகர மத்தியில் மேம்பாலமொன்று நிர்மாணிக்கப்பட்டுள்ளதென்பதை அறிவாரா?

(ii) தற்போதைய நாவலபிட்டிய நகரசபை நிர்வாகத்தினர் வீதிகள் அபிவிருத்தி அதிகாரசபையின் அனுமதியின்றி மேற்படி அரச சொத்தினை தகர்த்து விற்பனை செய்வதற்கு உத்தேசித்துள்ளார்கள் என்பதை அறிவாரா?

(iii) வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் நிர்மாணிக்கப்பட்ட இப் பாலத்தை தங்களின் அமைச்சின் அனுமதியின்றி தகர்த்து அப்புறப்படுத்தும் நடவடிக்கையினை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

651/ ' 18

கௌரவ சுசந்த புஞ்சிநிலமே,— நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி மற்றும் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சீனத் துறைமுகத்தில் அமைந்துள்ள எண்ணெய் குதங்கள் தொகுதி பண்டாரநாயக்க ஆட்சிக் காலத்தில் 250,000 ஸ்டேர்லிங் பவுண்கள் செலுத்தப்பட்டு அரசாங்கத்துக்கு சுவீகரிக்கப்பட்டதோடு இந்தியாவுக்கு குத்தகைக்கு கொடுக்கப்பட்டுள்ள எண்ணெய் குதங்களுக்கு மேலதிகமாக எஞ்சிய எண்ணெய் குதங்களையும் இந்தியாவுக்கு குத்தகைக்கு கொடுப்பதை தவிர பயன்மிக்க வேறு எந்த மாற்று யோசனைகளும் இல்லையா என்பதையும்;

(ii) சுதந்திரத்துக்கு பின்னர் இன்று வரை பதவியில் இருந்த பல்வேறு அரசாங்கங்களினாலும் தற்போதைய அரசாங்கத்தினாலும் பல்வேறு சந்தர்ப்பங்களில் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை பத்திரங்கள் மற்றும் கருத்திட்டங்கள் மேற்படி எண்ணெய் குதங்கள் தொடர்பாக அறிக்கையிடப்பட்டிருப்பின், அவற்றின் தலா ஒரு பிரதி வீதம் சமர்ப்பிக்க முடியுமா என்பதையும்;

(iii) மேற்படி எண்ணெய் குதங்களை கோரியுள்ள நாடுகளும் கோரப்பட்ட அடிப்படையும் யாவை என்பதையும்;

(iv) அவற்றை இந்திய எரிபொருள் கம்பனியினால் இந்தியாவுக்கு வழங்கப்படுவதற்கு எதிராக நாட்டில் மக்கள் அபிப்பிராயமொன்று உருவாகியுள்ளதால், அதற்கு செவிசாய்க்கும் வகையில் அது தொடர்பாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

773/ '19

கௌரவ இந்திக்க அனுருத்த ஹேரத்,— நகரத் திட்டமிடல், நீர்வழங்கல் மற்றும் உயர்கல்வி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) பட்டப்பின் படிப்பு பாடநெறியை கற்பதற்கு தகைமைகளை பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகளுக்கு 2016 ஆம் ஆண்டு சனவரி முதல் 2018 ஆகஸ்ட் 31 ஆம் திகதி வரை வழங்கப்பட்டுள்ள கடன் பெறுமதி எவ்வளவு என்பதையும்;

(ii) இக்கடனுக்கு அறவிடப்படுகின்ற வட்டி வீதம் எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்படி கடன் தொகையை மீளச் செலுத்தி முடிவுறுத்துவதற்காக வழங்கப்படும் உயர்ந்தபட்சக் கால எல்லை எவ்வளவு என்பதையும்;

(iv) மேற்படி கடன் தொகை வழங்கும் போது சம்பந்தப்பட்ட நிதி நிறுவனம் வைத்துக் கொள்கின்ற பிணையங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி (அ) (i) இற்கு அமைவாக வழங்கப்பட்டுள்ள கடன் தொகையில் 2018 ஆகஸ்ட் 31 ஆம் திகதியில் அறவிடப்பட்டுள்ள மொத்தத் தொகையும் வட்டியும் எவ்வளவு என்பதையும்;

(ii) இதுவரை அறவிடப்பட வேண்டிய ஆனால் இதுவரை அறவிடப்படாத கடன் தொகையை அறவிடுவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கை யாவையென்பதையும்;

(iii) இந்நடவடிக்கை தொடர்பாக திருப்தி அடைகின்றாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2019 திசெம்பர் 05, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

28/ '18

கௌரவ ஹேசா விதானகே,— பொது நிருவாக, அனர்த்த முகாமைத்துவ மற்றும் கால்நடை வளங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நாட்டின் ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவுக்கும் "சேவா பியச" அலுவலகம் ஒன்றை நிருமாணிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்கு ஒதுக்கப்பட்டுள்ள பணத்தொகை யாதென்பதையும்;

(ii) "சேவா பியச" அலுவலகமொன்றை நிருமாணிப்பதற்கு மதிப்பீடு செய்யப்பட்டுள்ள பணத்தொகை யாதென்பதையும்;

(iv) இந்நிகழ்ச்சித்திட்டத்தை நிறைவுசெய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ள திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

151/ '18

கௌரவ சமிந்த விஜேசிறி,— உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2010 ஆம் ஆண்டு தொடக்கம் இற்றைவரை திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவத்துடன் தொடர்புடைய சர்வதேச பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் பங்குபற்றிய உள்ளூரதிகார சபை பிரதிநிதிகளின் எண்ணிக்கை ஆண்டுவாரியாக வெவ்வேறாக எவ்வளவு;

(ii) அந்த பிரதிநிதிகளின் பெயர்கள் மற்றும் ஏற்புடைய உள்ளூரதிகார சபைகள் யாவை;

(iii) அந்த செயலமர்வுகள் நடைபெற்ற நாடுகள், நகரங்கள் மற்றும் கால எல்லைகள் வெவ்வேறாக யாவை;

(iv) இந்த ஒவ்வொரு செயலமர்விலும் பங்கேற்பதற்காக செலவிடப்பட்ட பணத்தொகை வெவ்வேறாக எவ்வளவு;

(v) மேற்படி செயலமர்வுகளின் பின்னர் குப்பைகூழ முகாமைத்துவத்திற்காக நிகழ்ச்சித்திட்டங்களை அமுலாக்கிய உள்ளூரதிகாரசபைகள் யாவை ;

என்பதை அவர் இச்பைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

422/ '19

கௌரவ பத்ம உதயசாந்த குணசேக்கர,— நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி மற்றும் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு.— (2)

(அ) (i) இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் Hyrax oil SduBhd கம்பனிக்கு இடையில், உராய்வுநீக்கி எண்ணெய் கலவை நிலையமொன்றை ஆரம்பித்து முன்னெடுப்பது தொடர்பிலான ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டுள்ளதா;

(ii) ஆமெனில், குறிப்பிட்ட திகதி யாது;

(iii) மேற்குறிப்பிட்ட ஒப்பந்தத்தின் பிரகாரம், உடன்பாடு எட்டப்பட்டுள்ள முதன்மை விடயங்கள் பற்றிய முழுமையான அறிக்கையொன்றை சமர்ப்பிப்பாரா;

(iv) மேற்குறிப்பிட்ட ஒப்பந்தத்தின் பிரகாரம், குறிப்பிட்ட கருத்திட்டத்துக்கான உரிய அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதா:

(v) மேற்குறிப்பிட்ட ஒப்பந்தத்தின் பிரகாரம், குறிப்பிட்ட கம்பனியானது ஏற்கனவே, இலங்கையில் உராய்வு நீக்கி எண்ணெய் கலவை நிலையமொன்றை நிர்மாணித்துள்ளதா;

(vi) உத்தேச உராய்வு நீக்கி எண்ணெய் கலவை நிலையத்துக்கு தேவையான எண்ணெய் வகைகளை இறக்குமதி செய்வதற்கான உரிமம் பெறப்பட்டுள்ளதா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

557/ '19

கௌரவ சி. சிறீதரன்,— நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி மற்றும் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சருமானவரை கேட்பதற்கு,— (1)

(அ) (i) கிளிநொச்சி மாவட்டத்தில் 1940 களிலிருந்து இயங்கிவந்த பிரதான எரிபொருள் சேகரிப்பு களஞ்சியசாலையானது யுத்தம் காரணமாக அழிவடைந்ததோடு அவ்விடத்திலிருந்து அகற்றப்பட்டதென்பதனை அவர் அறிவாரா;

(ii) மேற்படி எரிபொருள் சேகரிப்பு களஞ்சியசாலைக்கு பயன்படுத்தப்பட்ட காணி தற்போது எவரின் பொறுப்பிலுள்ளதென்பதனையும்;

(iii) அக்காணி நீண்ட கால குத்தகையின் அடிப்படையில் குறிப்பிட்ட தரப்பினருக்கு மாற்றப்பட்டுள்ளதாவென்பதனையும்;

(iv) மேற்குறிப்பிட்ட காணியில் பிரதான எரிபொருள் சேகரிப்பு களஞ்சியசாலையை மீளத் தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதனையும்;

(v) இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் கிளிநொச்சி மாவட்டத்தில் ஏனைய காணிகளை உடமையாகக் கொண்டுள்ளதாவென்பதனையும்;

(vi) ஆம் எனின், மேற்படி காணிகளின் அமைவிடங்கள் மற்றும் பரப்பளவுகளையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி (அ) (ii) இல் குறிப்பிடப்பட்ட காணியில் இயங்கிவந்த எரிபொருள் நிரப்பு நிலையமானது ஒரு தனியார் தரப்பிற்கு சொந்தமாக்கப்பட்டுள்ளது என்பதை அவர் அறிவாரா;

(ii) ஆமெனின் அவ்வுரிமையாளரின் பெயரையும்;

(iii) மேற்படி காணி தொடர்பிலான குத்தகைக் காலத்தையும்;

அவர் அறிவிப்பாரா?

(இ) (i) பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் எரிபொருள் நிரப்பு நிலையமொன்றை தாபிப்பது தொடர்பிலான பச்சிப்பள்ளி பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் வேண்டுகோள் மறுக்கப்பட்டமைக்கான காரணங்கள் என்னவென்பதனையும்;

(ii) இதுவரையிலும் இரண்டு தனியார் எரிபொருள் நிரப்பு நிலையங்கள் மேற்குறிப்பிட்ட பகுதியில் இயங்குவதற்கு அனுமதிக்கபட்டதற்கான காரணத்தையும்;

(iii) பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் மேற்குறிப்பிட்ட எரிபொருள் நிரப்பு நிலையங்கள் அமைந்துள்ள இடங்களையும் அவற்றின் உரிமையாளர்களின் பெயர்களையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

609/ '18

கௌரவ ஆனந்த அலுத்கமகே,— புத்தசாசன மற்றும் வடமேல் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) புஸ்ஸல்லாவ நகரத்தில் அமைந்துள்ள பௌத்த மதவழிபாட்டு நிலையங்களின் எண்ணிக்கை எவ்வளவு;

(ii) மேற்படி மதவழிபாட்டு நிலையங்களின் பெயர்கள் யாவை;

(iii) நல்லாட்சி அரசாங்கம் ஆட்சிக்கு வந்தபின்னர் இற்றைவரை மேற்படி மதவழிபாட்டு நிலையங்களை அபிவிருத்தி செய்வதற்காக அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா;

(ஆ) இன்றேல், ஏன்?

643/ '18

கௌரவ சுசந்த புஞ்சிநிலமே,— வெளிநாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இந்து சமுத்திர கடல்சார் அலுவல்கள் பற்றிய பிராந்திய அமைப்பு Indian Ocean Marine Affairs Cooperation (IOMC) எனும் நிறுவனம் இலங்கையில் உள்ளதா;

(ii) ஆமெனில் அதன் நோக்கங்கள் மற்றும் பணிப்பொறுப்புகள் யாவை;

(iii) அது ஒரு பிராந்திய அமைப்பெனில் அதன் அங்கத்துவ நாடுகள் யாவை;

(iv) அதன் உடன்பாடு யாது;

(v) மேற்படி உடன்பாட்டின் பிரதியொன்றை வழங்குவாரா;

(vi) மேற்படி உடன்பாடு வலுவாக்கப்பட்டிருப்பின் அந்நாடுகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

686/ '18

கௌரவ கனக ஹேரத்,— ஆரம்பக் கைத்தொழில் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கையில் சிறிய ஏற்றுமதிப் பயிர்களை பயிர் செய்துள்ள காணிகளின் அளவு மற்றும் மேற்படி பயிர்ச்செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகளின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது என்பதையும்;

(ii) 2015 முதல் 2018 ஆம் ஆண்டு வரை இலங்கையில் சிறிய ஏற்றுமதிப் பயிர் விளைச்சல் ஒவ்வொரு ஆண்டின் அடிப்படையில் வெவ்வேறாக யாது என்பதையும்;

(iii) சிறிய ஏற்றுமதிப் பயிர் செய்கையாளர்களுக்கு அரசினால் வழங்கப்படுகின்ற நிவாரண உதவிகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) தற்போது இலங்கையில் சிறிய ஏற்றுமதிப் பயிர்செய்கை வீழ்ச்சியடைந்துள்ளது என்பதை அவர் அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

779/ '19

கௌரவ ஜயந்த சமரவீர,— பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2018.04.30 ஆம் திகதி வரை சிறு தேயிலை சிறுபற்றுநிலங்கள் அபிவிருத்தி அதிகாரசபையில் முகாமையாளராக (மனிதவள/நிருவாக) பணியாற்றிய உத்தியோகத்தரின் பெயர், பதவியில் நியமிக்கப்பட்ட திகதி, பதவிக்குரிய மாதாந்த சம்பளம் மற்றும் கல்வித் தகைமைகள் யாவை என்பதையும்;

(ii) இவர் மேற்படி பதவியில் அமர்த்தப்படுவதற்கு முன்னர் இவ்வதிகாரசபையில் வேறேதேனும் பதவியை வகித்துள்ளாரா என்பதையும்;

(iii) ஆமெனில், பதவிகளின் எண்ணிக்கை, பதவிப் பெயர்கள் மற்றும் பதவிகள் தொடர்பில் பெற்றுக்கொண்ட மாதாந்த சம்பளம் எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி உத்தியோகத்தர் அதிகாரசபையின் பதவிக்கு மேலதிகமாக வேறு அரச நிறுவனமொன்றில், திணைக்களமொன்றில் அல்லது கூட்டுத்தாபனமொன்றில் பதவி வகித்துள்ளாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அந்நிறுவனத்தின் பெயர் மற்றும் பெற்றுக்கொண்ட மாதாந்த கொடுப்பனவு எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

868/ '19

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— நகரத் திட்டமிடல், நீர்வழங்கல் மற்றும் உயர்கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டில் குவைத் நிதியமெனும் மூலமொன்றிலிருந்து கிழக்கு பல்கலைக்கழக மருத்துவப் பீடத்திற்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், 2015 ஆண்டில் அந்நிதி செலவிடப்படாமைமைக்கான காரணம் யாதென்பதையும்;

(iii) தற்போது மேற்படி நிதி அப்பணிக்காக ஒதுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

884/ '19

கௌரவ பிமல் ரத்னாயக்க,— பொது நிருவாக, அனர்த்த முகாமைத்துவ மற்றும் கால்நடை வளங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2018 வறட்சி நிவாரணம் II ஆம் கட்டத்தின் கீழ் நிவாரணம் வழங்கப்பட்டுள்ள மாவட்டங்கள் யாவை என்பதையும்;

(ii) அதற்காக தெரிவு செய்யப்பட்ட பிரதேச செயலகப் பிரிவு மற்றும் அதற்காகச் செலவிடப்பட்ட மொத்தத் தொகை என்பன ஒவ்வொரு மாவட்டத்தின் பிரகாரம் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) அதன் பொருட்டு விநியோகிக்கப்பட்ட சுற்றறிக்கைகள் யாவை என்பதையும்;

(iv) அவற்றுக்கு மத்தியில் இறுதியாக நடைமுறைப்படுத்தப்பட்ட செல்லுபடியான சுற்றறிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) செல்லுபடியான சுற்றறிக்கையின் பிரகாரம் குருநாகல் மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட பயனாளிகளின் எண்ணிக்கை மற்றும் அதற்காகச் செலவிடப்பட்ட மொத்த தொகை ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவின் பிரகாரம் யாதென்பதையும்;

(ii) இரத்துச் செய்யப்படும் சந்தர்ப்பத்தில் NDRC/2018/03 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் குருநாகல் மாவட்டத்தில் இனங்காணப்பட்டிருந்த பயனாளிகள் ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவின் பிரகாரம் தனித்தனியாக முன்வைக்கப்படுமா என்பதையும்;

(iii) குருநாகல் மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட பிரதேச செயலாளர் பிரிவுகள் யாவை என்பதையும்;

(iv) அதில் பொல்பித்திகம உள்ளடங்கவில்லையெனில் அதற்கான காரணம் யாதென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

972/ '19

கௌரவ இஷாக் ரஹுமான்,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) பொலிஸ்மா அதிபரின் தலைமையில் கடந்த வருடத்தில் ஆரம்பிக்கப்பட்ட இபலோகம பிரதேச செயலகப் பிரிவிலுள்ள ரணவிரு கிராமத்தில் தாபிக்கப்பட்டுள்ள இபலோகம பொலிஸ் நிலையம் தற்காலிக கட்டடமொன்றில் இயங்கி வருவதை அறிவாரா;

(ii) பொலிஸ் நிலையத்திற்கு பொருத்தமான நிரந்தர கட்டடமொன்றை நிர்மாணித்து அங்கு பொலிஸ் நிலையத்தை கொண்டுநடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் திகதி யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1025/ '19

கௌரவ (கலாநிதி) பந்துல குணவர்தன,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2016 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட முன்மொழிவு இலக்கம் 281, 282, 283 மற்றும் 284 என்பவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் பிரகாரம், இலங்கையின் மூலதனச் சந்தையின் அபிவிருத்திக்காக பின்பற்றப்பட்ட பிரதான நடவடிக்கைகளை தெளிவுபடுத்துவாரா என்பதையும்;

(ii) முன்மொழிவு இலக்கம் 284 இன் பிரகாரம் பிணையங்கள் மற்றும் இலங்கைச் செலாவணி ஆணைக்குழுச் சட்டத்தைத் திருத்துவதற்குரியதாக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(iii) பங்குச் சந்தையின் வளர்ச்சியை அளவிடுவதற்காகப் பயன்படுத்தப்படுகின்ற நியமச் சுட்டெண்களுக்கமைவாக 2000 தொடக்கம் 2017 ஆம் ஆண்டு வரை இலங்கையின் பங்குச் சந்தையின் முன்னேற்றம் பற்றிய போக்குகளைக் காட்டுகின்ற அட்டவணையொன்றை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iv) தற்போது அசாதாரணமாக வட்டி வீதங்கள் அதிகரித்துக் காணப்படுகின்றமையானது பங்குச் சந்தையின் அபிவிருத்திக்குத் தடையாகக் கருதப்படுகின்றதா என்பதையும்;

(v) இன்றேல், அது தொடர்பாக கொண்டுள்ள கருத்து யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1037/ '19

கௌரவ டலஸ் அழஹப்பெரும,— நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) உயர் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதும், இதுவரையில் தீர்ப்பு வழங்கப்படாததுமான மனித உரிமைகள் தொடர்பான வழக்குகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) அந்த வழக்குகள் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட திகதிகள் யாவை என்பதையும்;

(iii) அந்த அனைத்து வழக்குகளுக்குரிய முறைப்பாட்டாளர்களின் பெயர்கள் மற்றும் வழக்கு எண்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1045/ '19

கௌரவ ஷெஹான் சேமசிங்க,— தேசிய ஒருமைப்பாடு, அரசகரும மொழிகள், சமூக மேம்பாடு மற்றும் இந்து சமய அலுவலகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்திற்கான அலுவலகம் தாபிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) அவ்வலுவலகம் தாபிக்கப்பட்ட சட்டம் யாதென்பதையும்;

(iii) அதன் நோக்கம் யாதென்பதையும்;

(iv) அதன் பணியாட்தொகுதியினர் யாவரென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) அவ்வலுவலகத்திற்குரிய விடயப்பரப்பு யாதென்பதையும்;

(ii) உள்நாட்டிலிருந்தும் வெளிநாட்டிலிருந்தும் நிதி கிடைக்கப் பெறுவது எவ்வழிகளில் என்பதையும்;

(iii) நிதிகளை வழங்கிய நபர்கள் வெவ்வேறாக யாவர் என்பதையும்;

(iv) செலவுச் சுருக்கம் யாதென்பதையும்;

(v) இது வரையிலும் நடாத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் அவற்றை நெறிப்படுத்திய நபர்கள் யாவரென்பதையும்;

(vi) இதற்கான நிதிகளை வழங்கிய அரச சார்பற்ற அமைப்புக்கள் யாவை என்பதையும்;

(vii) சகவாழ்வை மேம்பாட்டிற்காக மேற்கொள்ளப்பட்ட பணிகள் யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1047/ '19

கௌரவ அநுராத ஜயரத்ன,— சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2018.03.18 ஆம் திகதி கம்பளை ஆதார வைத்தியசாலையில் புதிய திடீர் விபத்து மற்றும் அவசர சிகிச்சைக் கூறுக்கான அடிக்கல் நாட்டப்பட்டதென்பதையும்;

(ii) வைத்தியசாலை வளவில் இடவசதி மட்டுப்பட்டதாக அமைவதால் வைத்தியசாலை நிர்வாகத்தினரின் வேண்டுகோளின் பிரகாரம் உத்தேச கட்டடத்தின் அத்திவாரம் ஐந்து மாடிகளுக்கு பொருத்தமான வகையில் அமைக்கப்பட தீர்மானிக்கப்பட்டதென்பதையும்;

(iii) நிர்வாகத்தினரின் வேண்டுகோளை பொருட்படுத்தாமல் அமைச்சினால் கட்டடத்தின் அத்திவாரம் இரண்டு மாடிகளுக்கு பொருத்தமானவகையில் அமைக்கப்பட தீர்மானிக்கப்பட்டுள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) சம்பந்தப்பட்ட நிர்மாணப் பணிகளை உரியவகையில் மேற்கொள்வதற்காக உடன்படிக்கை செய்யப்பட்டிருந்த போதிலும் இப்பணியை மந்தகதியில் மேற்கொண்டு வருவதற்கான காரணம் யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

## 2019 திசெம்பர் 06, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

33/ '18

கௌரவ ஹேசா விதானகே,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பிரிவெனாக் கல்வி நிறுவனங்களுக்கான ஆசிரியர்களை ஆட்சேர்ப்பு செய்கையில் கவனத்திற் கொள்ளப்படுகின்ற அடிப்படை கல்வித்தகைமைகள் யாவை;

(ii) தற்போது பிரிவெனாக் கல்வி நிறுவனங்களில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகின்றதா;

(iii) ஆமெனில் மேற்படி பற்றாக்குறை நிலவுகின்ற ஆசிரியர்களின் எண்ணிக்கை யாது;

(iv) கல்வி அமைச்சின் பிரிவெனாக் கல்விக் கூறு மூலமாக பிரிவெனாக் கல்வியை மேம்படுத்த மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

153/ '18

கௌரவ சமிந்த விஜேசிறி,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கழிவுகள் தொடர்பான தீர்மானங்களை மேற்கொள்கின்ற, அது தொடர்பிலான நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற சுற்றாடல் மற்றும் மகாவலி அபிவிருத்தி அமைச்சின் கீழுள்ள நிறுவனங்கள் யாவை;

(ii) 2010 ஆம் ஆண்டு தொடக்கம் இற்றைவரை இந்நிறுவனங்களின் அலுவலர்கள் கழிவுகள் முகாமைத்துவம் தொடர்பாக வெளிநாட்டு கற்கைப் பயணங்களை மேற்கொண்டுள்ளனரா;

(iii) ஆமெனில், அவ்வலுவலர்களின் பெயர்கள், பதவிகள் மற்றும் வெளிநாட்டுக் கற்கைகள் பற்றிய விபரங்கள் யாவை;

(iv) மேற்படி ஒவ்வொரு கற்கை நடவடிக்கைகளுக்கும் செலவிடப்பட்ட பணத் தொகை வெவ்வேறாக எவ்வளவு;

(v) குறிப்பிட்ட கற்கைப் பயணங்களில் கலந்து கொண்ட அலுவலர்களின் அறிவு அமைச்சின் நடவடிக்களுக்காக பயன்படுத்தப்பட்ட முறை யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

366/ '18

கௌரவ வேலு குமார்,— அரச தொழில் முயற்சிகள், மலைநாட்டு மரபுரிமைகள் மற்றும் கண்டி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான க்ரெட்வெலி தோட்டத்தில் 2002 ஆம் ஆண்டில் தொழில் புரிந்த தோட்டத் தொழிலாளர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) 2000 முதல் 2015 ஆம் ஆண்டு வரை இத்தோட்டத்தில் தொழில் புரிந்து ஓய்வெடுக்கச் செய்யப்பட்ட ஆண் மற்றும் பெண் தோட்டத் தொழிலாளர்களின் எண்ணிக்கை தனித்தனியாக யாது என்பதையும்;

(iii) அவ்வாறு ஓய்வெடுக்கச் செய்யப்பட்ட தொழிலாளர்களில் இன்றளவில் ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதி மற்றும் ஓய்வூதியப் பணிக்கொடை செலுத்தப்படாத தொழிலாளர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iv) அவ்வாறான தொழிலாளர் ஒவ்வொருவரினதும் பெயர், அங்கத்தவர் இலக்கம், ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதி மற்றும் பணிக்கொடை ஊதியத்தின் நிலுவை தனித்தனியாக யாது என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

558/ '19

கௌரவ சி. சிறீதரன்,— கைத்தொழில், வாணிப அலுவல்கள், நீண்டகாலமாக இடம்பெயர்ந்த நபர்களின் மீள்குடியேற்றம், கூட்டுறவுத்துறை அபிவிருத்தி, தொழில் பயிற்சி மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கிளிநொச்சி நகர மத்தியில் அமைந்துள்ள சதொச வியாபார நிலையமானது பிரதேச சபையின் அனுமதியின்றி நிர்மாணிக்கப்பட்டுள்ளதா;

(ii) சதொச கட்டடம் அமைந்துள்ள காணி எந்நிறுவனத்திற்குச் சொந்தமானது;

(iii) இந்த இடம் குறித்ததொரு நபருக்கு நீண்டகாலக் குத்தகைக்கு விடப்பட்டுள்ளதா;

என்பதை அவர் அறிவாரா?

(ஆ) சதொச வியாபார நிலையம் நடாத்திச் செல்லப்படும் இக்கட்டடத்தை,

(i) நிர்மாணிப்பதற்கு கரைச்சி பிரதேச சபையின் அனுமதி பெறப்பட்டுள்ளதா;

(ii) இக்கட்டடத்தின் நிகழ்கால உரிமையாளரின் பெயர் என்ன;

(iii) அரச செலவில் நிர்மாணிக்கப்பட்டிருப்பின், கேள்விமனு கோரல் தொடர்பான தகவல்கள் என்ன;

(iv) கட்டட நிர்மாணத்திற்காக உறப்பட்ட செலவு எவ்வளவு;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

610/ '18

கௌரவ ஆனந்த அலுத்கமகே,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) கடந்த இரண்டு வருடங்களுள் கண்டி மாவட்டத்தில்,

(i) மேற்கொள்ளப்பட்ட போதைப்பொருள் சார்ந்த சுற்றிவளைப்புகளின் எண்ணிக்கை;

(ii) போதைப்பொருள் தொடர்பில் கைதுசெய்யப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை;

(iii) கைப்பற்றப்பட்ட போதைப்பொருட்களின் பெறுமதி;

வெவ்வேறாக யாது என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) தற்போது தடைசெய்யப்பட்டுள்ள சட்டவிரோத போதைப்பொருள் வகையைச் சேர்ந்த போதைப்பொருள்களாக இனங்காணப்பட்டுள்ள மற்றும் அவை கொண்டுவரப்படும் நாடுகள் அடங்கிய பெயர் பட்டியலொன்றை அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) கண்டி மாவட்டத்தில், கம்பளை மற்றும் அண்மிய பிரதேசங்கள் நீண்ட காலமாக போதைப் பொருள்களை விநியோகிக்கும் மத்திய நிலையமாக இயங்கி வருவதையும், பாடசாலை மாணவர்களையும் இளைஞர்களையும் இலக்கு வைத்து இயங்கி வரும் இந்த விநியோக வலையமைப்பு இதுவரையும் பலமான நிலையில் காணப்படுவதையும் அறிவாரா என்பதையும்;

(ii) இந்த போதைப்பொருள் கடத்தல்காரர்களை விரைவாக சட்டத்தின்முன் நிறுத்தி, அப்பிரதேசத்திலிருந்து போதைப்பொருள்களை ஒழிக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

666/ ' 18

கௌரவ டக்ளஸ் தேவானந்தா,— போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சருமானவரை கேட்பதற்கு,— (1)

(அ) (i) முல்லைத்தீவு மாவட்டத்தில் பற்றாக்குறையான போக்குவரத்து வசதிகள் காரணமாக மக்கள் பல்வேறுபட்ட கஷ்டங்களுக்கு முகம்கொடுக்கின்றார்கள் என்பதனையும்;

(ii) முல்லைத்தீவு மாவட்டத்தின் அதிகஷ்டப் பிரதேசங்களான கோட்டை கட்டிய குளம், தென்னியன்குளம், நாட்டாங்கண்டல், முத்துஐயன்கட்டு போன்ற பகுதிகளில் சீரான போக்குவரத்து வசதிகள் இன்மை காரணமாக பாடசாலை மாணவர்கள் உள்ளிட்ட பொதுமக்கள் பாரிய சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர் என்பதனையும்;

(iii) முல்லைத்தீவு இலங்கை போக்குவரத்துச் சபைக்கு 32 பேரூந்துகள் தேவைப்படுகின்ற நிலையில், 24 பேரூந்துகளே தற்போது காணப்படுவதோடு அதில் 20 பேரூந்துகளே பயணிகள் போக்குவரத்தில் ஈடுபடுகின்றன என்பதனையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) முல்லைத்தீவு இலங்கை போக்குவரத்துச் சபை டிப்போவுக்கு மேலும் புதிய பேரூந்துகளை வழங்கி, பொது மக்களின் வசதி கருதி பயணிகள் சேவையை மேலும் சீராக்கி வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதனையும்;

(ii) ஆமெனில், எப்போது இதனை மேற்கொள்ள முடியும் என்பதனையும்;

(iii) இன்றேல், அதற்கான காரணம் என்னவென்பதனையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

806/ '19

கௌரவ ஜயந்த சமரவீர,— பிரதம அமைச்சரும் தேசியக் கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி, தொழில் பயிற்சி, திறன்கள் அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015.02.01 ஆம் திகதி முதல் சட்டவிரோத போதைப்பொருள் விற்பனை மற்றும் பயன்பாடு தொடர்பில் கைதுசெய்யப்பட்ட நபர்களின் எண்ணிக்கை ஒவ்வோர் ஆண்டு வாரியாக தனித்தனியாக யாது என்பதையும்;

(ii) சட்டவிரோத போதைப்பொருள் ஒழிப்பிற்காக செயற்படுகின்ற அரச அல்லது அரசின் அனுசரணை பெறும் நிறுவனங்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) அவ்வாறான நிறுவனம் ஒவ்வொன்றினாலும் கைப்பற்றப்பட்ட சட்டவிரோத போதைப்பொருளின் அளவு தனித்தனியாக யாது என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

815/ '19

கௌரவ சுசந்த புஞ்சிநிலமே,— நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி மற்றும் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஆசிய அபிவிருத்தி வங்கி நிதியுதவியின்பேரில் அமுலாக்கப்படுகின்ற i - ROAD கருத்திட்டத்தின்கீழ் திருகோணமலை மாவட்டத்தில் அமுலாக்க முன்மொழியப்பட்டிருந்த கருத்திட்டங்கள் யாவை;

(ii) அவை மத்தியில் அமுலாக்க அங்கீகரிக்கப்பட்டுள்ள முன்மொழிவுகள் யாவை ;

(iii) மேற்படி அங்கீகாரம் அடிப்படையாகக் கொள்ளப்படுகின்ற பொருளாதார பகுப்பாய்வு பற்றிய மதிப்பாய்வு (Economic Analysis), வாகனப் போக்குவரத்து மற்றிய ஆய்வு (Traffic Survey) மற்றும் GPS மதிப்பாய்வின் நிபந்தனைகள் அல்லது அளவுகோல்கள் தனித்தனியாக யாவை;

(iv) பதவி ஸ்ரீபுர பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள ஸ்ரீபுர நகரத்திற்கு பிரவேசிப்பதற்குள்ள பிரதானமான கிராமத்திற்கூடான வீதியான ஏறக்குறைய 8 கிலோ மீட்டர் தூரத்தைக்கொண்ட சிங்கபுர வீதி இதன்கீழ் காபற் இடப்பட்டு அபிவிருத்தி செய்யப்படுமா;

(v) திருகோணமலை மாவட்டத்தில் மாகாண மற்றும் நிரல் அமைச்சுகளுக்குரிய பயணிகள் போக்குவரத்துச் சேவைகள் இடம்பெறுகின்ற வீதிகளில் குறைந்தபட்சம் கொங்கிறீட்கூட இடப்படாத பல வீதிகள் உள்ளமையால் அவ்வீதிகளை அபிவிருத்தி செய்வதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

857/ '19

கௌரவ கனக ஹேரத்,— போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை போக்குவரத்துச் சபையின் சாரதிகள், நடாத்துனர்கள் மற்றும் தொழில்நுட்ப மட்டத்தைச்சேர்ந்த (PL தொகுதியின்) உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை மற்றும் நிறைவேற்று மட்டத்தைச்சேர்ந்த உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை எவ்வளவு;

(ii) PL தொகுதியைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் 3/2016 ஆம் இலக்க பொதுநிர்வாக சுற்றறிக்கைக்கிணங்க சம்பளம் பெறுகிறார்களா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) PL தொகுதியைச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கு 3/2016 ஆம் இலக்க பொதுநிர்வாக சுற்றறிக்கைக்கிணங்க பதவியுயர்வு வழங்குகின்ற முறையியலொன்று நிலவுகின்றதென்பதை அறிவாரா;

(ii) இ.போ.ச. உத்தியோகத்தர்களுக்கு தற்போது பதவியுயர்வுகள் வழங்கப்படுகின்றனவா;

(iii) ஆமெனில் மேற்படி பதவியுயர்வுகள் வழங்கப்படுகின்ற தரங்கள் யாவை;

(iv) பதவியுயர்வுகள் 3/2016 ஆம் இலக்க பொதுநிர்வாக சுற்றறிக்கைக்கிணங்கவா வழங்கப்படுகின்றன;

(v) இன்றேல் எத்தகைய முறையியலுக்கிணங்க;

(vi) இந்த பதவியுயர்வுகளை வழங்குவதன் மூலமாக ஒரு டிப்போவுக்கு மேலதிகமாக நியமிக்கப்படுகின்ற நிறைவேற்று உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை யாது;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல் ஏன்?

869/ '19

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— நகரத் திட்டமிடல், நீர்வழங்கல் மற்றும் உயர்கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2018 ஆண்டில் உயர் கல்விக்காக விண்ணப்பித்துள்ள மாணவர்களின் எண்ணிக்கை 30,000 என்பதோடு, அவர்களில் பல்கலைக்கழகத்திற்கு சேர்த்துக்கொள்ளப்படும் மாணவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) 2017 ஆம் ஆண்டில் தெஹிவளை உயர் தொழில்நுட்ப நிறுவனத்தில் மேற்கொள்ளும் டிப்ளோமா (HND) கணக்கியல் பாடநெறிக்கு 180 பேர் சேர்த்துக்கொள்ளப்பட்ட போதிலும் 2018 ஆம் ஆண்டில் அவ்வெண்ணிக்கை 114 வரை குறைக்கப்பட்டிருப்பது ஏன் என்பதையும்;

(iii) இவ்வாறு அனைத்து HND பாடநெறிக்கும் சேர்த்துக்கொள்கின்ற மாணவர்களின் எண்ணிக்கை குறைக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மாணவர்கள் சங்கங்கள் தாபிக்கப்படுவதற்கு முன்பு இருந்த உரிமை தற்போது இரத்துச்செய்வதற்கான காரணம் யாதென்பதையும்;

(ii) தற்போது இலங்கை உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவனத்தின் (SLIATE) மாணவர் சங்க உரிமை இரத்து செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) மாணவர் சங்கங்கள் இரத்து செய்யப்பட்டமையால் மனக்குறைகள் தொடர்பாக எத்தகைய நடவடிக்கை மேற்கொண்டாலும் அது ஒழுக்கவிரோத செயலாக கருதி தண்டனை வழங்கப்படுகின்றதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

901/ '19

கௌரவ பிமல் ரத்நாயக்க,— பொது நிருவாக, அனர்த்த முகாமைத்துவ மற்றும் கால்நடை வளங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2018 வரட்சி நிவாரணம் படிமுறை I இன் கீழ் பொல்பித்திகம பிரதேச செயலகப் பிரிவில் தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) அதற்கென செலவு செய்யப்பட்ட பணத்தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) இதன் II ஆம் படிமுறையின் போது பொல்பித்திகம பிரதேச செயலகப் பிரிவில் எந்தவொரு பயனாளியும் தெரிவு செய்யப்படவில்லையென்பதனை அறிவாரா என்பதையும்;

(iv) ஆமெனில், அது ஏன் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) பிரதேச செயலாளர் NDRSC/2018/03 என்ற இலக்கமுடைய இரத்துச் செய்யப்பட்ட சுற்றுநிருபத்தினையே கையாண்டுள்ளார் என்பதனை ஏற்றுக்கொள்வாரா;

(ii) செல்லுபடியாகும் NDRSC/2018/03ii என்ற இலக்கமுடைய சுற்றுநிருபத்தினை நடைமுறைப்படுத்தாதது ஏன்;

(iii) 2018.10.22 ஆம் திகதி பிரதேச செயலாளரால் பயனாளிகள் இல்லையென உரிய அமைச்சின் செயலாளருக்கு எழுத்து மூலம் அறிவித்திருப்பது இரத்துச் செய்யப்பட்ட சுற்றுநிருபத்தின் 4 ஆம் பந்தியில் வழங்கப்பட்டுள்ள ஆலோசனைகளுக்கு அமைவாகவா;

(iv) இரத்துச் செய்யப்பட்ட சுற்றுநிருபத்தின் 4 ஆம் பந்தி மீறப்பட்டுள்ளமையை ஏற்றுக்கொள்வாரா;

என்பதனையும் அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1036/ '19

கௌரவ டலஸ் அழகப்பெரும,— நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையின் மாவட்ட நீதிமன்றங்களில் முன்வைக்கப்பட்டுள்ள முறைப்பாடுகளுள் இதுவரையில் விசாரணை செய்யப்படாத மற்றும் விசாரணை செய்யப்பட்டு வருகின்ற வழக்குகள் காணப்படின், உரிய வழக்கு எண்கள் மற்றும் அவை நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட திகதிகளுடன் வெவ்வேறாக யாதென்பதனையும்;

(ii) தீர்ப்பு வழங்கப்படாத அந்த வழக்கு விசாரணைகளுள் 25 வருடங்களை விடவும் கூடிய; 20-25 வருடங்களுக்குட்பட்ட; 15-20 வருடங்களுக்குட்பட்ட; 10-15 வருடங்களுக்குட்பட்ட; 05-10 வருடங்களுக்குட்பட்ட; 01-05 வருடங் களுக்குட்பட்டதும், மேலும் பழமையான வழக்குகள் யாவையென்பதனை உரிய வழக்கு எண்கள் மற்றும் முதலில் பதிவு செய்யப்பட்ட திகதியுடன் வெவ்வேறாக யாவை என்பதனையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1039/ '19

கௌரவ விதுற விக்கிரமநாயக்க,— உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அன்றாடம் பெருந்தொகையான பாடசாலை மாணவர்களும் பொதுமக்களும் நடமாடுகின்ற ஹொரண நகரம் சாதாரணமான மழை நாட்களில்கூட நீரில் மூழ்குகின்றதென்பதையும்;

(ii) அத்துடன் ஹொரண நகரத்தில் ஸ்ரீ தம்மரத்தன மாவத்த பிரதேசத்தை உள்ளிட்ட மேலும் பல பிரதேசங்கள் சாதாரணமான மழை நாட்களில்கூட நீரில் மூழ்குவதால் அப்பிரதேச வீட்டுச்சொந்தக்காரர்களின் வீடுகள், ஆதனங்கள் மற்றும் தளபாடங்கள் பல சந்தர்ப்பங்களில் சேதமடைந்ததனவென்பதையும்;

(iii) ஹொரண ஆதார வைத்தியசாலைக்கு அருகிலுள்ள பிரதேசமும் சாதாரணமான மழை நாட்களில்கூட நீரில் மூழ்குவதால் வைத்தியசாலைக்கு வருகை தரும் நோயாளிகளும் பாரிய சிரமங்களை எதிர்நோக்குகின்றனரென்பதையும்;

அவர் அறிவாரா ?

(ஆ) மேற்படி நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்காக ஹொரண நகரத்தின் வடிகான் தொகுதியை ஒழுங்கமைக்க உடனடி நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1048/ '19

கௌரவ அநுராத ஜயரத்ன,— நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர்கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கம்பளை, உடபலாத பிரதேச சபைக்குரிய கலத்த, மாவத்துற, கெக்குலந்த, வெலிகங்க மற்றும் களுகல்ஹின்ன ஆகிய பிரதேசங்களில் மக்கள் நீண்டகாலந்தொட்டு தீவிரமான குடிநீர்ப் பிரச்சினையால் பாதிக்கப்பட்டுள்ளரென்பதையும்;

(ii) இப்பிரதேசங்களுக்கு எற்புடைய நீர்க்கருத்திட்டங்களுக்காக 2016 ஆம் ஆண்டில் அமைச்சரவைப் பத்திரமொன்று சமர்ப்பிக்கப்பட்டு நிதிவசதிகளை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) நீரின்மை காரணமாக பாதிக்கப்பட்டுள்ள மேற்படி பிரதேசங்களைச் சேர்ந்த மக்களுக்கு குடிநீர் வசதிகளை வழங்க நடவடிக்கை எடுப்பாரா;

(ii) ஆமெனில் அத்திகதி யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா ?

(இ) இன்றேல், ஏன்?

1053/ '19

கௌரவ விமலவீர திசாநாயக்க,— கமத்தொழில், கிராமியப் பொருளாதார அலுவல்கள், நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2018/2019 பெரும்போகத்தில் அம்பாறை மாவட்டத்தில் சோளம் பயிரிடப்பட்ட காணியளவு யாது;

(ii) மேற்படி காணியளவில் சேனைப்புழு சேதம் காரணமாக அழிவடைந்த விளைநிலத்தின் அளவு ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவுக்கிணங்க வெவ்வேறாக யாது;

(iii) சேனைப்புழுவின் சேதம் காரணமாக அழிவடைந்த சோளச் செய்கைக்காக அம்பாறை மாவட்ட கமக்காரர்களுக்கு செலுத்திய மொத்த இழப்பீடு எவ்வளவு;

(iv) மேற்படி இழப்பீட்டுத்தொகை ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவுக்கிணங்க வெவ்வேறாக எவ்வளவு;

(v) சேனைப்புழு சேதம் காரணமாக அழிவடைந்த சோளச் செய்கைக்கான இழப்பீடு கிடைக்காத பெருந்தொகையான கமக்காரர்கள் அம்பாறையை உள்ளிட்ட பல மாவட்டங்களில் உள்ளனரென்பதை அறிவாரா;

(vi) அநீதிக்கு இலக்காகிய மேற்படி கமக்காரர்களுக்காக இழப்பீடு செலுத்தப்படுமா;

(vii) ஆமெனில், அத்திகதி யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா ?

(ஆ) இன்றேல், ஏன்?

# 2019 திசெம்பர் 17, செவ்வாய்க்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

43/ '18

கௌரவ ஹேஷா விதானகே,— கமத்தொழில், கிராமியப் பொருளாதார அலுவல்கள், நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பலாங்கொடை பிரதேச செயலகப் பிரிவில், வலேபொட, உடகந்த எனும் பெயரில் வயல் வெளியொன்று உள்ளதென்பதை அறிவாரா;

(ii) இந்த வயல் வெளியில் எத்தனை ஏக்கர் வயற் காணிகள் உள்ளன;

(iii) சுமார் 10 ஆண்டுகளாக இந்த வயல் வெளிக்கு நீர் கிடைக்காத காரணத்தினால் தரிசு நிலமாக மாறிவிட்டதை அறிவாரா;

(iv) ஆமெனில், இந்த வயல் வெளியில் பயிரிடுவதற்கு அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

94/ '18

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2015 ஆம் ஆண்டளவில் இலங்கை அரசாங்கத்தின் வேண்டுகோளுக்கமைய இன்டபோல் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ள புலிகள் இயக்கம் சார்பான இயக்கங்களின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி காலகட்டத்தில் குறிப்பிட்ட பட்டியலில் உள்ளடங்கிய புலிப் பயங்கரவாதிகளின் எண்ணிக்கை மற்றும் பாதாள உலக கோஷ்டி அங்கத்தவர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2015 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இதுவரையில் இன்டபோல் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டுள்ள புலிகள் இயக்கம் சார்பான அமைப்புக்களின் எண்ணிக்கை யாது;

(ii) 2015 இற்குப் பின்னர் இதுவரையில் இன்டபோல் பட்டியலிருந்து நீக்கப்பட்டுள்ள புலிப் பயங்கரவாதிகளின் எண்ணிக்கை யாது;

(iii) மேற்படி அமைப்புகள் மற்றும் பயங்கரவாதிகளை இன்டபோல் பட்டியலில் இருந்து நீக்குவதற்கான காரணம் யாது;

(iv) மேற்படி நீக்குவதற்காக இலங்கை அரசாங்கம் அங்கீகாரம் வழங்கியுள்ளதா;

(v) சர்வதேச ரீதியில் புலிகளுக்கு சார்பானவர்கள் இலங்கை அரசாங்கத்துக்கு எதிராக முன்னெடுக்கும் செயற்பாடுகளுக்கு இந்த நீக்கமானது ஊக்கமளிப்பதாக அமைவதை அவர் ஏற்றுக்கொள்வாரா;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

154/ '18

கௌரவ சமிந்த விஜேசிறி,— உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) பதுளை - பண்டாரவளை வீதியில், 2 ஆம் மைல் கல்லின் அருகாமையிலுள்ள பாலம் கடுமையாக சிதைவுற்றுள்ளதை அறிவாரா;

(ii) இப்பாலத்தினூடாக செல்லவேண்டியுள்ள கிராமங்களின் பெயர்கள் யாவை;

(iii) இப்பாலத்தின் பழமை பாதுகாக்கப்படக் கூடியவாறு நவீனமயப்படுத்துவதற்கு அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

473/ '19

கௌரவ சுசந்த புஞ்சிநிலமே,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) சனாதிபதி மற்றும் பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் திரு.கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிராக சதித் திட்டம் தீட்டியமைக்கான குற்றச்சாட்டுக்கு உள்ளாகி இருக்கின்ற பிரதி பொலிஸ் மா அதிபர் திரு. நாலக்க சில்வா தனது சேவைக் காலத்தில் தவறான நடத்தை அல்லது வேறு ஏதேனும் குற்றச்சாட்டுக்கு ஆளாகியிருந்தால் அந்தச் சம்பவம், திகதி, மேற்கொள்ளப்பட்டுள்ள ஒழுக்காற்று அல்லது ஏனைய சட்டரீதியான நடவடிக்கைகளின் தீர்மானங்கள் மற்றும் அவற்றின் நிழற் பிரதிகளை வழங்குவாரா என்பதையும்;

(ii) பயங்கரவாத புலனாய்வுப் பிரிவின் பிரதி பொலிஸ் மா அதிபராக அவர் ஆற்றிய சேவைகளின் துல்லியமான தன்மை மற்றும் பக்கச்சார்பின்மை பற்றி திருப்தி அடைகின்றாரா என்பதையும்;

(iii) நாட்டின் தலைவருக்கும் பயங்கரவாதத்தை அழித்த பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளருக்கும் எதிரான சதித்திட்டம் தொடர்பானதொரு முறைப்பாடு என்பதால் அந்த உத்தியோகத்தரை கட்டாய லீவில் அனுப்புவதின் மூலம் மாத்திரம் நியாயமான விசாரணையொன்று இடம்பெறுமென திருப்தி அடைகின்றாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

503/ '19

கௌரவ ஜயந்த சமரவீர,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2010 முதல் 2017 வரையில் ஐக்கிய நாடுகளின் அமைதிப்படையில் பங்கேற்ற முப்படை மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை யாது;

(ii) அமைதிப்படை பணிகளுக்காக தெரிவு செய்யப்படும் உத்தியோகத்தர்களுக்கு தற்போது இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் விதப்புரை தேவையென பாதுகாப்பு அமைச்சு கட்டளை பிறப்பித்துள்ளதா;

(iii) உரிய உத்தியோகத்தர்கள் தொடர்பில் ஆராய்ந்து பார்த்து, ஐக்கிய நாடுகள் சபைக்கு விதப்புரை செய்வதற்கான மிகச் சிறந்த நிறுவனங்கள் காணப்படுகையில், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு அதை பொறுப்பளித்ததன் பின்னணி யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2010 முதல் இதுவரையில் முப்படை மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்களது தடைநீக்கச் சான்றிதழ் வழங்குவதற்காக ஆணைக்குழுவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள ஆவணங்களின் எண்ணிக்கை மற்றும் தடைநீக்கச் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ள ஆவணக்கோவைகளின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது;

(ii) தற்போது அமைதிப்படைப் பணிகளில் பங்கேற்போர்களது எண்ணிக்கை விரைவாக குறைந்துள்ளதை அறிவாரா;

(iii) இதற்கான காரணம் யாது;

(iv) 2018 மார்ச் மாதத்தில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டுள்ள 400 ஆவணக்கோவைகளில் இதுவரையில் 07 ஆவணக் கோவைகளுக்கு மாத்திரமே தடைநீக்கச் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளமையை அவர் அறிவாரா;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

544/ '19

கௌரவ பிமல் ரத்நாயக்க,— அமைச்சரவை அந்தஸ்த்தற்ற தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கை புடவைக் கைத்தொழில் கூட்டுத்தாபத்திற்கு உரித்தானதாகக் காணப்பட்ட துல்ஹிரிய புடவைத் தொழில்சாலை முதலில் பொம்பே ரெக்ஸ் நிறுவனத்திற்கு விற்பனை செய்யப்பட்டது என்பதையும்;

(ii) பின்னர் மேற்படி கம்பனியினால் இது கொரியக் கம்பனியொன்றான காபூல் லங்கா நிறுவனத்திற்கு விற்பனை செய்யப்பட்டது என்பதையும்;

(iii) காபூல் லங்கா கம்பனியினால் இது வாஸ் கோல்டன் நிறுவனத்திடம் பொறுப்பளிக்கப்பட்ட போது ஊழியர்களுக்கு பணிக்கொடை மற்றும் நட்டஈடு செலுத்தப்பட்டது என்பதையும்;

(iv) இவ்வனைத்து சந்தர்ப்பங்களிலும் நிறுவனம் விற்பனை செய்யப்பட்டிருப்பது ஊழியர்கள் மற்றும் அவர்களின் உரிமைகள் உட்படவாகும் என்பதையும்;

(v) அச்சந்தர்ப்பத்தில் உத்தியோகபூர்வ வாசஸ்தலங்களில் வசித்துவந்த ஊழியர்களுக்கு, எந்தவொரு தொகையும் செலுத்தப்படவில்லை என்பதையும்;

(vi) இலங்கை முதலீட்டுச் சபை தற்போது இந்த வாசஸ்தலங்களில் வசித்துவருகின்ற ஆட்களை அகற்றுவதற்கு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) சேவையிலிருந்து ஓய்வுபெறும் போது அல்லது சேவையிலிருந்து நீக்கும் போது இந்த ஊழியர்களுக்குச் செலுத்தப்படாத பணிக்கொடை மற்றும் நட்டஈட்டைச் செலுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(ii) உத்தியோகபூர்வ வாசஸ்தலங்களில் சுமார் 40 வருடங்கள் வசித்துவருகின்ற ஆட்களை மேற்படி வாசஸ்தலங்களிலிருந்து வெளியேற்றும் முயற்சியைத் தடுத்து வாசஸ்தலங்களின் உரித்தைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(iii) ஆமெனில், அத்திகதி யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

604/ '18

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— ஆரம்பக் கைத்தொழில் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) பொதுமக்களுக்கான உதவு தொகை வழங்கப்படுவது எதுவித வருமானமுமற்ற நோயாளர்களுக்கா அல்லது அங்கவீனமுற்ற நிலையில் காணப்படுகின்ற நபர்களுக்கா அல்லது குடும்பங்களுக்கா என்பதனை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) எஹெலியகொடை பிரதேச செயலாளர் பிரிவின் இலக்கம் 143 பீ நுகதண்ட கிராம சேவகர் பிரிவில் 23 நபர்களுக்கு பொது மக்களுக்கான உதவி தொகை வழங்கப்படுகின்றதென்பதையும், அவர்களுக்கு மத்தியில் 5 பேருக்கு மாதாந்தம் 300/- ரூபாய் வீதமும், ஏனையோருக்கு 250/- ரூபாய் வீதமும் வழங்கப்படுகின்றதென்பதையும் ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) குறிப்பிட்ட தொகையானது அக்குடும்பங்களுக்கு ஒரு நாள் செலவினத்திற்குக்கூட போதுமானதல்ல என்பதனை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iii) ஆமெனில், இந்த உதவியற்ற குடும்பங்களுக்கு வழங்கப்படுகின்ற பெயரளவிலான கொடுப்பனவுக்குப் பதிலாக 1000/- ரூபாவிலான கொடுப்பனவினையேனும் பெற்றுக்கொடுப்பதற்கு உடன்படுபாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

831/ '19

கௌரவ டக்ளஸ் தேவானந்தா,— சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் கடந்த 8 வருடங்களாக பயன்பாட்டிலுள்ள சி.ரி ஸ்கேனர் இயந்திரமானது செயலிழந்துள்ளது என்பதையும்;

(ii) மேற்சொல்லப்பட்ட காரணத்தினால் உரிய நோயாளர்கள் வவுனியா மற்றும் இதர வைத்தியசாலைகளுக்கு பாரிய சிரமங்களுக்கு மத்தியில் கொண்டு செல்லப்பட வேண்டியுள்ளதென்பதையும்;

(iii) சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சானது புதிய சி.ரி ஸ்கேனர் இயந்திரமொன்றை வழங்குவதற்கு உறுதியளித்திருந்தது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு புதிய சீ.ரி ஸ்கேனர் இயந்திரம் ஒன்றை வழங்குவதற்கு விரைவான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதனையும்;

(ii) ஆமெனில், எத்தினத்தில் இது வழங்கப்படுமென்பதனையும்;

(iii) தற்போது செயலிழந்துள்ள சீ.ரி ஸ்கேனர் இயந்திரத்தைத் திருத்துவதற்கு ஏதேனும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாவென்பதனையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

858/ '19

கௌரவ கனக ஹேரத்,— போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2014 ஆம் ஆண்டில் இலங்கை போக்குவரத்துச் சபைக்காக 2200 புதிய பஸ் வண்டிகள் கொண்டுவரப்பட்டுள்ளதென்பதையும்;

(ii) இந்த பஸ் வண்டிகள் குத்தகை அடிப்படையிலேயே வழங்கப்பட்டுள்ளன என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) 2015 ஆம் ஆண்டிலிருந்து மேற்படி குத்தகை செலுத்துதல் நிறுத்துப்பட்டுள்ளதா;

(ii) ஆமெனில் அதற்கான காரணங்கள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

918/ '19

கௌரவ ஆனந்த அலுத்கமகே,— துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அம்பாந்தோட்டை துறைமுகத்தை நிர்மாணிப்பதற்காக செலவாகிய பணத்தொகை எவ்வளவு;

(ii) மேற்படி பணத்தொகையை பெற்றுக்கொண்ட தோற்றுவாய்கள் யாவை;

(iii) துறைமுகம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட நாள்முதல் இற்றைவரை அத்துறைமுகத்திற்கு வந்த கப்பல்களின் எண்ணிக்கை, அக்கப்பல்களின் பெயர்கள் மற்றும் தரையிறக்கிய கொள்கலன்களின் எண்ணிக்கை மாதாந்தம் வெவ்வேறாக எவ்வளவு;

(iv) அக்காலப்பகுதிக்குள் துறைமுகத்தின் வருமானம் மற்றும் பராமரிப்புச் செலவுகள் வெவ்வேறாக எவ்வளவு;

(v) அம்பாந்தோட்டை துறைமுகத்தை பிராந்தியத்தின் முன்னேற்றமடைந்த துறைமுகமாக மாற்றுதல் தொடர்பிலான நல்லாட்சி அரசாங்கத்தின் நோக்கு யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1009/ ' 19

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2014 ஏப்ரல் மாதத்தில், இலங்கை விமானப் படையினால் ரேடார் ரிசீவரொன்றும் அன்டெனா ஸ்கேனரொன்றும் பழுதுபார்ப்பதற்காக சீனாவுக்கு அனுப்பப்பட்டுள்ள போதிலும், அப் பொருட்கள் காணாமல் போயுள்ளதை அவர் ஏற்றுக்கொள்கின்றாரா என்பதையும்;

(ii) அப்பொருட்களை ஏற்றி இறக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்ட நிறுவனம் யாதென்பதையும்;

(iii) அந்நிறுவனத்தின் பணிப்பாளர் சபை அங்கத்தவர்கள் யாவர் என்பதையும்;

(iv) அந் நிறுவனம் இன்னும் இலங்கையின் யாதேனுமொரு அரச நிறுவனத்துக்கு சேவைகளை வழங்குகின்றதா என்பதையும்;

(v) அப்பொருட்கள் காணாமல் போனதால் ஏற்பட்ட இழப்பு எவ்வளவென்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1027/ '19

கௌரவ (கலாநிதி) பந்துல குணவர்தன,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,—(2)

(அ) (i) நிதி அமைச்சரினால் "100 நாள் புரட்சி" பற்றிய பிரகடனத்தின் மூலம் தெரிவிக்கப்பட்டவாறு விவசாயிகளால் வர்த்தக வங்கிகளுக்குச் செலுத்த வேண்டியுள்ள ரூபா 100,000/- வரையிலான கடன் மூலதனத்திலிருந்து 50% வீதம் வெட்டப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) விவசாயக் கடன்கள் வெட்டிவிடப்பட்டதன் விளைவாக அரசாங்கத்திற்கு ஏற்பட்ட செலவினச் சுமையின் அளவு யாதென்பதையும்;

(iii) கடன் வெட்டிவிடப்பட்ட விவசாயிகளின் பெயர்ப் பட்டியலையும் மேற்படி ஒவ்வொரு விவசாயினது பெயருக்கு முன்னாலும் வெட்டிவிடப்பட்ட கடனின் தொகை குறிப்பிடப்பட்டுள்ள ஒரு ஆவணத்தையும் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iv) விவசாயிகளின் வெட்டிவிடப்பட்ட கடன் சார்பாக வர்த்தக வங்கிகளுக்கு அரசாங்கத்தினால் இதுவரை செலுத்தப்பட்டுள்ள பணத்தொகை எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1049/ '19

கௌரவ ரீ. ரஞ்ஜித் த சொய்சா,— சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) பொது சுகாதார கள உத்தியோகத்தர்களை நடுத்தர மட்டத்திலான தொழில்நுட்ப சேவைக்கு உள்ளீர்ப்புச் செய்வது தொடர்பில் வெளியிடப்பட்ட 22/2002 ஆம் இலக்க சுற்றறிக்கைக்கு அமைய சப்பிரகமுவ மாகாண சுகாதார அலுவலர்கள் அல்லது அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் அலுவலர்கள் நடவடிக்கை மேற்கொள்ளாதிருப்பது ஏன் என்பதையும்;

(ii) சப்பிரகமுவ மாகாண ஆளுநரின் கட்டளைக்கு அமைய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழு நடவடிக்கை மேற்கொள்ளாதிருப்பதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iii) மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளர் ஆளுநரின் பணிப்புரையை மூன்று சந்தர்ப்பங்களில் புறக்கணித்துள்ளமைக்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iv) மேற்படி பொது சுகாதார கள உத்தியோகத்தர்களுக்குச் செலுத்த வேண்டிய மொத்தத் தொகை யாது என்பதையும்;

(v) எதிர்காலத்தில் மேற்படி தொகையைச் செலுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1071/ '19

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2019.03.27 அல்லது அதற்கு அண்மித்த தினமொன்றில் டேயிலி நியூஸ் செய்தித்தாளில் பிரசுரமாகிய அறிவித்தலில்,

(i) 2018.12.31 ஆம் திகதி முதல் பிரதேச அபிவிருத்தி வங்கியால் லங்காபுத்ர அபிவிருத்தி வங்கி கையகப்படுத்தப்பட்டுள்ளதாகவும்;

(ii) 2019.04.01 ஆம் திகதி முதல் அவ்வங்கியின் அனைத்து வங்கி நடவடிக்கைகளும் பிரதேச அபிவிருத்தி வங்கி மூலமாகவே மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும்;

(iii) கையகப்படுத்தல் நடவடிக்கைக்கு 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கிச் சட்டத்தின் 76(J)(1) பிரிவின் கீழ் இலங்கை மத்திய வங்கி அதற்கான அனுமதியை வழங்கியுள்ளதாகவும்;

குறிப்பிடப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி அறிவித்தலை பிரசுரிப்பதற்கு இலங்கை மத்திய வங்கியின் அனுமதி வழங்கப்பட்டதா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இந்த கையகப்படுத்தல் நடவடிக்கைக்கு,

(i) லங்காபுத்ர அபிவிருத்தி வங்கிப் பணிப்பாளர் சபையின்;

(ii) லங்காபுத்ர அபிவிருத்தி வங்கி வருடாந்த பொதுச் சபைக் கூட்டத்தின்;

(iii) கம்பெனிகள் பதிவாளரின்;

(iv) நிதி அமைச்சரின்;

(v) பாரளுமன்றத்தின்;

அங்கீகாரம் கிடைத்துள்ளதா என்பதனை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) பிரதேச அபிவிருத்தி வங்கியின் பங்குதாரர்கள் மற்றும் அவர்களது பங்குகளின் அளவு வெவ்வேறாக எவ்வளவு என்பதையும் அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

1134/ '19

கௌரவ (டாக்டர்) (திருமதி) சுதர்ஷினி பர்னாந்துபுள்ளே,— வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற வீடமைப்புத் திட்டங்களின் போது உள்நாட்டு களிமண் கூரை ஓடுகளின் உற்பத்தியாளர்களுக்கு கூரை ஓடுகளை வழங்குவதற்கான சந்தர்ப்பம் கிடைக்காது போயுள்ளது என்பதனையும்;

(ii) இதன் காரணமாக 100% சுகாதாரத்திற்கு சாதகமான உள்நாட்டு கூரை ஓடுகள் உற்பத்தியானது சீரழிந்துள்ளது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) எதிர்வரும் காலங்களில் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற வீடமைப்புத் திட்டங்களின் போது உள்நாட்டு களிமண் கூரை ஓடுகளை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதனை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# 2019 திசெம்பர் 18, புதன்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

52/ '18

கௌரவ ஹேஷா விதானகே,— உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் புரநெகும கருத்திட்டத்தின் கீழ் பதுளை மாவட்டத்தில் செயற்பட்டு வரும் பிள்ளை பராமரிப்பு நிலையங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) இவற்றின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) இவற்றிற்கென செலவிடப்பட்ட தொகை எவ்வளவென்பதையும்;

(iv) பதுளை மாவட்டத்தில் பகல்நேரப் பராமரிப்பு நிலையங்களின் தரத்தை உயர்த்துவதற்கு அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

99/ '18

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) நாட்டில் காணப்படும் குற்றச்செயல்களை தடுக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கையில் 2015 ஆம் ஆண்டு தொடக்கம் கொலை செய்யப்பட்டுள்ள பொலிஸ் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு வருடத்தின் படி யாது;

(ii) மேற்படி பொலிஸ் உத்தியோகத்தர்கள் கொலை செய்யப்பட்டமைக்கான காரணங்களைக் குறிப்பிடுவாரா;

(iii) அவர்களது மனைவி பிள்ளைகளுக்காக வழங்கப்படும் கொடுப்பனவுகளின் பெறுமதியைக் குறிப்பிடுவாரா;

(iv) மேற்படி உத்தியோகத்தர்களது மனைவி, பிள்ளைகளைப் பாதுகாப்பதற்காக பொலிஸ் திணைக்களம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

(v) அவர்களது விதவைகள் மற்றும் அநாதைகளுக்கான கொடுப்பனவுகள் உரிய வகையில் செலுத்தப்பட்டுள்ளதா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) கொலை செய்யப்பட்டதன் பின்னர் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ள பொலிஸ் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை யாது;

(ii) கொலை செய்யப்பட்டதன் பின்னர் பதவி உயர்வு வழங்கப்படாத பொலிஸ் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை யாது;

(iii) கொலை செய்யப்பட்டதன் பின்னர் பதவி உயர்வு வழங்கப்படாத உத்தியோகத்தர்களுக்கு அவ்வாறு பதவி உயர்வு வழங்காமைக்கான காரணம் யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) குற்றச்செயல் தடுப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள பொலிஸ் உத்தியோகத்தர்களின் உயிர் பாதுகாப்பு மற்றும் அவர்களது மனைவி பிள்ளைகளது பாதுகாப்பு தொடர்பில் தற்போது காணப்படும் செயன்முறையை மேம்படுத்துவதற்கான செயற்பாடுகள் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படுமா;

(ii) ஆமெனில், இது மேற்கொள்ளப்படும் காலகட்டம் மற்றும் எதிர்பார்க்கப்படும் செயன்முறையினை சபாபீடத்தில் சமர்ப்பிப்பாரா;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

165/ '18

கௌரவ சமிந்த விஜேசிறி,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஊவா மாகாண பாடசாலைகளில் பணியாற்றும் ஆசிரியர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) மேற்படி ஆசிரியர்களில் அநேகமானவர்களுக்கு நிலுவைச் சம்பளம் செலுத்த வேண்டியுள்ளமையை அறிவாரா என்பதையும்;

(iii) மேற்படி ஆசிரியர்களுக்குரிய நிலுவைச் சம்பளத்தைச் செலுத்துவதற்கு அமைச்சு எடுக்கும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

368/ '18

கௌரவ வேலு குமார்,— அரச தொழில் முயற்சிகள், மலைநாட்டு மரபுரிமைகள் மற்றும் கண்டி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான கொலபதன தோட்டத்தில் 2002 ஆம் ஆண்டில் தொழில் புரிந்த தோட்டத் தொழிலாளர் களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) 2000 முதல் 2015 ஆம் ஆண்டு வரை இத்தோட்டத்தில் தொழில் புரிந்து ஓய்வெடுக்கச் செய்யப்பட்ட ஆண் மற்றும் பெண் தோட்டத் தொழிலாளர்களின் எண்ணிக்கை தனித்தனியாக யாது என்பதையும்;

(iii) அவ்வாறு ஓய்வெடுக்கச் செய்யப்பட்ட தொழிலாளர்களில் இன்றளவில் ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதி மற்றும் ஓய்வூதியப் பணிக்கொடை செலுத்தப்படாத தொழிலாளர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iv) அவ்வாறான தொழிலாளர் ஒவ்வொருவரினதும் பெயர், அங்கத்தவர் இலக்கம், ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதி மற்றும் பணிக்கொடை ஊதியத்தின் நிலுவை தனித்தனியாக யாது என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல் ஏன்?

497/ '19

கௌரவ ஜயந்த சமரவீர,— அரச தொழில்முயற்சிகள், மலைநாட்டு மரபுரிமைகள் மற்றும் கண்டி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2017.12.31 ஆம் திகதியன்று மக்கள் தோட்ட அபிவிருத்தி சபைக்குரிய மனித வலு மதிப்பீடு மற்றும் ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம், கடமையாற்றிய ஊழியர்களின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்குறிப்பிட்ட எண்ணிக்கையை ஒவ்வொரு பதவிக்கும் ஏற்ப வெவ்வேறாக குறிப்பிடுவாரா;

(iii) 2015 ஜனவரி முதல் இன்று வரையில், நிறுவனத்துக்கு ஆட்சேர்க்கப்பட்டுள்ள நிரந்தர, அமைய மற்றும் தற்காலிக ஊழியர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது;

(iv) ஆட்சேர்ப்பு நடைமுறைக்குக்குப் புறம்பாக ஆட்சேர்க்கப்பட்டவர்களும் இவர்களிடையே உள்ளார்கள் என்பதை ஏற்றுக்கொள்வாரா;

(v) மேற்படி ஆட்சேர்ப்புக்கள் மற்றும் அவர்களுக்கான சம்பளக் கொடுப்பனவுகள் தொடர்பில் மக்கள் தோட்ட அபிவிருத்தி சபை எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

559/ '19

கௌரவ சி. சிறீதரன்,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வட மாகாணத்தில் இயங்குகின்ற அரச வங்கிகள், தனியார் வங்கிகள், காப்புறுதிக் கம்பனிகள், நிதிக் கம்பனிகள் மற்றும் நுண்நிதிக் கம்பனிகள் மாவட்டரீதியாக எத்தனை;

(ii) அவற்றின் பெயர்கள்;

(iii) பொதுமக்களுக்குக் கடன் வழங்குகையில், தனியார் வங்கிகள், காப்புறுதிக் கம்பனிகள் மற்றும் நுண்நிதிக் கம்பனிகளால் தனித்தனியாக அறவிடப்படும் வட்டி வீதங்கள்;

ஆகியவற்றை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) வட மற்றும் கிழக்கு மாகாணங்களில் இயங்கும் நுண்நிதிக் கம்பனிகளின் நியாயமற்ற நடைமுறைகளால் இழைக்கப்பட்ட அநீதிகள் காரணமாக அதிகளவிலான உயரிழப்புக்கள் ஏற்பட்டுள்ளன என்பதை அவர் அறிவாரா;

(ii) எதிர்காலத்தில் அத்தகைய உயிரிழப்புக்கள் ஏற்படாது தடுக்குமுகமாக மேற்படி நுண்நிதிக் கம்பனிகளின் செயற்பாடுகளை மேற்பார்வை செய்யும் நடவடிக்கைகளில் அரசாங்கம் தலையிடுமா;

(iii) யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு தமது பொருளாதார இயலுமைகளை இழந்துள்ள வட மற்றும் கிழக்கு மாகாண மக்களை இலக்கு வைத்து நுண்நிதிக் கம்பனிகள் அவர்களது செயற்பாடுகளைத் துரிதப்படுத்துவதற்கான நோக்கம் என்ன;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

670/ '18

கௌரவ டக்ளஸ் தேவானந்தா,— நகரத் திட்டமிடல், நீர்வழங்கல் மற்றும் உயர்கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மன்னார், மடுப் பிரதேச செயலாளர் பிரிவில் வலையன்கட்டு கிராமத்தில் மீள்குடியேறிய மக்களின் குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்யும் நோக்கில், அரச சார்பற்ற நிறுவனமொன்றின் உதவியுடன் பல மில்லியன் ரூபா செலவில் குடிநீர் விநியோகத் திட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது என்பதையும்;

(ii) இவ்வாறு முன்னெடுக்கப்பட்ட இத்திட்டம் முழுமைப்படுத்தப்படாமல், அரைகுறையாகக் கைவிடப்பட்டுள்ளது என்பதையும்;

(iii) இக்கிராம மக்கள் தங்களது குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக மிகவும் சிரமப்படுகின்றனர் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி குடிநீர் விநியோகத் திட்டத்தை முழுமைப்படுத்தி வலையன்கட்டு கிராம மக்களின் குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்து கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(ii) அவ்வாறெனில், அத்திகதி யாதென்பதையும்;

(iii) இல்லையெனில் அதற்குக் காரணம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

698/ '19

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2017.09.30 ஆம் திகதியன்று உள்ளவாறு கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகள் அல்லது அரச கம்பனிகளில் பணிப்பாளர் பதவியை அல்லது முகாமைத்துவச் சபை அங்கத்தவர் பதவியை வகிக்கும் இலங்கைப் பிரசை அல்லாத ஆட்கள் யாவர் என்பதையும்;

(ii) 2017.09.30 ஆம் திகதியன்று உள்ளவாறு கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகள் அல்லது அரச கம்பனிகளில் பணிப்பாளர் பதவியை அல்லது முகாமைத்துவச் சபை அங்கத்தவர் பதவியை வகிக்கும் இரட்டை பிரசாவுரிமையுடைய ஆட்கள் யாவர் என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

763/ '19

கௌரவ சுசந்த புஞ்சிநிலமே,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) மத்திய வங்கி பிணைமுறி மோசடியுடன் தொடர்புடைய பர்பச்சுவல் டிரஷரீஸ் நிறுவனம் செலான் வங்கியில் பேணிவருவதாக கூறப்படும் மென்டிஸ் கம்பனியின் கணக்கின் ஊடாக பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்கள் உட்பட சிலருக்கு பணம் வழங்கப்பட்டதாக நிதமும் ஊடகங்களின் செய்திகள் வெளியாவதை அவர் அறிவாரா?

(ஆ) (i) இதற்கு அமைவாக, பர்பச்சுவல் டிரெஸரீஸ் நிறுவனம், மென்டிஸ் கம்பனியின் பெயரில் செலான் வங்கியில் பேணிவரும் கணக்கிற்கு 2015.01.01 தொடக்கம் 2018.01.01 வரை வைப்பிலிடப்பட்ட தொகை எவ்வளவு என்பதையும்;

(ii) இத்தொகை வைப்பிலிடப்பட்ட சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை மற்றும் இவ்வாறு ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் வைப்பிலிடப்பட்ட தொகை தனித்தனியே எவ்வளவு என்பதையும்;

(iii) 2015.01.01 தொடக்கம் 2018.01.01 வரையான காலத்தில் மென்டிஸ் கம்பனியின் கணக்கிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ள திகதி, ஒவ்வொரு திகதியில் விடுவிக்கப்பட்டுள்ள தொகையின் அளவு மற்றும் இப்பணம் செலுத்தப்பட்ட நபர்களின் பெயர்கள் தனித்தனியே யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

844/ '19

கௌரவ ஆனந்த அலுத்கமகே,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு ,— (1)

(அ) (i) இன்றளவில் இலங்கை மத்திய வங்கியின் கீழ் பதிவுசெய்துள்ள நிதிக் கம்பெனிகளின் எண்ணிக்கை யாது;

(ii) அவற்றின் பெயர்கள் மற்றும் பணிப்பாளர் சபை யாது;

(iii) நல்லாட்சி அரசாங்கம் ஆட்சிக்க வந்த நாள் முதல் நிதி நெருக்கடிகளுக்கு இலக்காகிய நிதிக் கம்பெனிகளின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் பெயர்கள் யாவை;

(iv) அவ்வொவ்வொரு நிதிக் கம்பெனியிலும் வைப்புகளை பேணிவந்துள்ள வைப்பாளர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது ;

(v) அந்நிதிக் கம்பெனிகளின் வைப்பாளர்களுக்கு நீதியை நிலைநாட்ட இற்றைவரை மேற்கொண்ட மற்றும் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படுகின்ற வழிமுறைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

870/ '19

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— அமைச்சரவை அந்தஸ்த்தற்ற வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) எல்.பீ கருணாரத்ன என்பவர் உள்ளிட்ட மேலும் 17 பேருக்கு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் ஓய்வூதியம் செலுத்துகையில் அநீதி இழைக்கப்பட்டுள்ளது என்பயும்;

(ii) இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு மற்றும் பொது மனுக்கள் பற்றிய குழு ஆகியவற்றின் சிபாரிசுகளையேனும் அப்போதைய நிதி, வெகுசன ஊடக அமைச்சு நடைமுறைப்படுத்தவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) பொது மக்கள் மனுக்குழுவினால் நடாத்தப்பட்ட விசாரணையில் அப்போதைய நிதி, வெகுசன ஊடக அமைச்சின் உத்தியோகத்தர்கள் ஓய்வூதியம் வழங்குவதற்கு இணங்கியுள்ளார்கள் என்பதை ஏற்றுக்கொள்கின்றாரா என்பதையும்;

(ii) சனாதிபதியின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் சனாதிபதி செயலகத்தினால் வழங்கப்பட்டுள்ள சிபாரிசுகளையும் நடைமுறைப்படுத்தாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி நபர்களுக்கு ஓய்வூதியம் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

902/ '19

கௌரவ பிமல் ரத்நாயக்க,— பொது நிருவாக, அனர்த்த முகாமைத்துவ மற்றும் கால்நடை வளங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வறட்சி நிவாரணம் வழங்கும் பொருட்டு வெளியிடப்பட்ட NDRSC/2018/03 சுற்றுநிருபத்தின் 4 ஆம் பந்தியின் படி பொல்பித்திகம பிரதேச செயலகப் பிரிவின் அனைத்து கிராம அலுவலர் பிரிவுகளிலும் கள உத்தியோகத்தர்கள் மூவரைக் கொண்ட குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளதா;

(ii) ஆமெனில், கூட்டப்பட்ட கூட்டங்களின் எண்ணிக்கை, திகதிகள், நேரங்கள், இடங்கள், சமுகமளிப்பு, நிகழ்ச்சி நிரல்கள் மற்றும் கலந்துரையாடல் குறிப்புக்கள் என்பவற்றை சமர்ப்பிப்பாரா;

(iii) எந்தவொரு பயனாளியும் இல்லையென குழு ஏகமனதாக பரிந்துரை செய்துள்ளதா;

(iv) அந்த பரிந்துரைகளைச் சமர்ப்பிப்பாரா;

என்பதனை அவர் அறிவிப்பாரா?

(ஆ) (i) இதற்கமைவாக பிரதேச செயலாளரின் தலைமையில் உரிய அதிகாரிகளைக் கொண்ட குழு ஒன்று கூடியுள்ளதா;

(ii) ஆமெனில், அக்கூட்டங்கள் தொடர்பான விரிவான அறிக்கையொன்றினை சமர்ப்பிப்பாரா;

(iii) எந்தவொரு பயனாளியும் இல்லையென குழு ஏகமனதாக பரிந்துரை செய்துள்ளதா;

(iv) அந்த பரிந்துரைகளை சபையில் சமர்ப்பிப்பாரா;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) 2018 வறட்சி நிவாரணம் படிமுறை II ஐ நடைமுறைப்படுத்துகின்ற போது பொல்பித்திகம பிரதேச மக்களுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதனை ஏற்றுக்கொள்வாரா;

(ii) அதனைத் நிவர்த்தி செய்வதற்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் யாது;

(iii) உரிய நிவாரணங்கள் மக்களுக்கு வழங்கப்படுமா;

(iv) குற்றவாளிகளுக்கெதிராக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் யாது;

என்பதனை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

980/ '19

கௌரவ இஷாக் ரஹுமான்,— போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொழும்பு – மட்டக்களப்பு புகையிரதப் பாதையில் கலாவெவ புகையிரத நிலையம் பெரும் எண்ணிக்கையிலான பயணிகள் பயன்படுத்துகின்ற ஒரு புகையிரத நிலையம் என்பதையும்;

(ii) பயணிகளுக்கு புகையிரத நிலையத்திலிருந்து பிரதான வீதிக்கு பிரவேசிப்பதற்குள்ள சுமார் 300 மீற்றர் நீளமான வீதி மிகவும் சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றதென்பதையும்;

(iii) இக் காரணத்தினால் புகையிரதப் பயணிகள் அவ் வீதியை பயன்படுத்தாமல் ஆபத்தான முறையில் புகையிரத மேடையிலிருந்து புகையிரதப் பாதை ஊடாக பயணித்து பிரதான வீதிக்கு பிரவேசிக்கையில் விபத்துக்கள் நேரக்கூடும் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) சுமார் 300 மீற்றர் தூர இக் குறும் வீதியை துரிதமாக அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1135/ '19

கௌரவ (டாக்டர்) (திருமதி) சுதர்ஷினி பர்னாந்துபுள்ளே,— கைத்தொழில், வாணிப அலுவல்கள், நீண்டகாலமாக இடம்பெயர்ந்த நபர்களின் மீள்குடியேற்றம், கூட்டுறவுத்துறை அபிவிருத்தி, தொழிற்பயிற்சி மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நேரடியாக அல்லது மறைமுகமாக இலட்சக் கணக்கான மக்களது ஜீவனோபாய மார்க்கமாக, அதேவேளை 100% உள்நாட்டுக் கைத்தொழில் துறையாக விளங்குகின்ற கூரை ஓட்டுக் கைத்தொழில்துறையை முன்னேற்றுவதற்கு அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி கைத்தொழில் துறையானது பாரிய வீழ்ச்சியை அடைந்துள்ளமையை அவர் அறிவாரா என்பதையும்;

(iii) மேற்படி கைத்தொழில் துறையின் வீழ்ச்சியுடன் உள்நாட்டுக் கைத்தொழில் துறையைச் சார்ந்த களிமண் கூரை ஓடுகளின் உற்பத்தியாளர்களும் அந்த நிறுவனங்களில் பணியாற்றும் ஊழியர்களும் எதிர்நோக்க நேரிடுகின்ற தலைவிதி யாதென்பதையும்;

(iv) அஸ்பஸ்டோஸ் கூரைத்தகடு உற்பத்தியில் ஈடுபடும் பல்தேசிய கம்பனிகளுக்கு வரிச்சலுகைகள் வழங்கப்பட்டு அரச நிறுவனங்களுக்கென அஸ்பஸ்டோஸ் கூரைத் தகடுகள் கொள்வனவு செய்யப்படுவதனை அவர் அறிவாரா என்பதையும்;

(v) உள்நாட்டுக் களிமண் கூரை ஓடுகள் உற்பத்தியாளர்களுக்கு இதுவரையில் வழங்கப்பட்டுள்ள அரச அனுசரணைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1138/ '19

கௌரவ கனக ஹேரத்,— கமத்தொழில், கிராமியப் பொருளாதார அலுவல்கள், நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடற்றொழில் துறையில் கடந்த 5 வருட காலப்பகுதியினுள் இலங்கை பெற்றுக்கொண்ட வருமானம் ஒவ்வொரு வருட அடிப்படையில் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(ii) மீன் உற்பத்தி ஏற்றுமதி மூலமாக கடந்த 5 வருட காலப்பகுதியினுள் இலங்கை பெற்றுக்கொண்ட வருமானம் ஒவ்வொரு வருட அடிப்படையில் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

அவர் அறிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கையில் கடற்றொழில் துறையின் உற்பத்திகள் இந்நாட்டு நுகர்விற்கு போதுமானதாக இல்லையா என்பதையும்;

(ii) இலங்கையில் மீன் உற்பத்திகள் இறக்குமதி செய்யப்படுகின்றனவா என்பதையும்;

(iii) ஆமெனில், அதற்கென வருடமொன்றுக்கு செய்யப்படுகின்ற செலவு யாதென்பதையும்;

(iv) மீன் உற்பத்திகள் இறக்குமதி மூலமாக இந்நாட்டு கடற்றொழில் துறையானது பின்னடைவுக்கு இலக்காக மாட்டாதா என்பதையும்;

(v) கடலால் சூழப்பட்டதொரு தீவாகிய எமது நாட்டில் கடற்றொழில் துறையை பாரிய அளவில் முன்னேற்றக்கூடியதாக இருக்கின்ற போதிலும் அவ்வாறு செய்யாதிருப்பது ஏனென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2019 திசெம்பர் 19, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

57/ '18

கௌரவ ஹேஷா விதானகே,— உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பண்டாரவளை பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தினுள் லியன்கஹவெல, 7 ஆம் கட்டை, கடை வீதி என்ற பெயரில் மிகப் பழைமைவாய்ந்ததொரு இடம் காணப்படுகின்றது என்பதையும்;

(ii) மேற்படி இடம் கடந்த பல வருடங்களில் பிரதேச சபையினால் முறையாக பராமரிக்கப்பட்டிருக்கவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) பிரதேச சபை ஊடாக இந்த இடத்தை அபிவிருத்தி செய்வதற்கு அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கை யாது என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

100/ '18

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) நாட்டில் காணப்படும் குற்றச்செயல்களைக் தடுக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கையில் 2015 ஆம் ஆண்டு முதல் உபாதைகளுக்கு உள்ளான பொலிஸ் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு வருடத்தின் படி யாது;

(ii) மேற்படி பொலிஸ் உத்தியோகத்தர்களில் முழுமையாக வலது குறைந்த நிலைக்கு ஆளாகியுள்ள உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை யாது;

(iii) அவர்களுக்கு செலுத்தப்பட்டுள்ள கொடுப்பனவுகளின் அளவு யாது;

(iv) கொடுப்பனவுகள் செலுத்தப்படாதுள்ள உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை யாது;

(v) அவர்களுக்கு கொடுப்பனவுகள் செலுத்தப்படாமைக்கான காரணம் யாது;

(vi) முழுமையாக வலது குறைந்த நிலைக்கு ஆளாகியுள்ள உத்தியோகத்தர்களுக்கான மாதாந்த கொடுப்பனவுகள் உரிய முறையில் வழங்கப்படுகின்றனவா;

(vii) மாதாந்த கொடுப்பனவுகள் வழங்கப்படாதுள்ள முழுமையாக வலது குறைந்த நிலைக்கு ஆளாகியுள்ள உத்தியோகத்தர்கள் காணப்படுகிறார்களா;

(viii) ஆமெனில், அவர்களுக்கு மாதாந்த கொடுப்பனவு வழங்கப்படாமைக்கான காரணம் யாது;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

166/ '18

கௌரவ சமிந்த விஜேசிறி,— உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 09 ஆம் திகதிய அபெ/15/0180/6/3/008 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்துக்கமைய அமைச்சரொருவருக்கு நியமிக்கக்கூடிய ஆலோசகர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) இருப்பினும், ஊவா மாகாண ஆளுநரினால் ஊவா மாகாண முதலமைச்சருக்கு 07 ஆலோசகர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள் என்பதை அறிவாரா என்பதையும்;

(iii) ஆலோசகர் நியமனம் தொடர்பாக தெளிவான அமைச்சரவை தீர்மானமொன்று இருக்கையில், அதனை கவனத்தில் கொள்ளாது ஊவா மாகாண முதலமைச்சருக்கு 07 ஆலோசகர்கள் எந்த சட்ட ஏற்பாடுகளுக்கமைய நியமிக்கப்பட்டார்கள் என்பதையும்;

(iv) இது தொடர்பாக கணக்காய்வு விசாரணையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுக்கமைய சீராக்குவதற்கு அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

423/ '19

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) திருகோணமலை மாவட்டத்தின் குச்சவெளி தொல்பொருளியல் இடம் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட திகதி யாது;

(ii) மேற்படி தொல்பொருளியல் இடம் பற்றிய தொல்பொருளியல் மதிப்பாய்வுகள் அல்லது முற்றாய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா;

(iii) இதுவரை கிடைத்துள்ள தொல்பொருளியல் சார்ந்த விடயங்கள் யாவை;

(iv) அது பற்றிய முழுமையான அறிக்கையொன்றை சமர்ப்பிப்பாரா;

(v) இந்த தொல்பொருளியல் இடத்தின் அழிவுக்கு ஏதுவாக அமையத்தக்க வகையில் அதற்குச் சொந்தமான காணிகளில் எவரேனும் வெளித்தரப்பினர் குடியமர்ந்துள்ளனரா;

(vi) அதற்கிணங்க மேற்படி தொல்பொருளியல் இடத்திற்கு நேர்ந்துள்ள சேதம் பற்றிய முழுமையான அறிக்கையொன்றினை சமர்ப்பிப்பாரா;

(vii) இன்றளவில் இந்த தொல்பொருளியல் இடத்தை பாதுகாக்க மேற்கொண்டுள்ள சட்ட நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

780/ '19

கௌரவ ஜயந்த சமரவீர,— பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு.— (1)

(அ) (i) 1989.09.11 ஆம் திகதி தேயிலை சிறுபற்றுநிலங்கள் அபிவிருத்தி அதிகார சபையின் உதவி முகாமையாளராக (கருத்திட்டம்) நியமனம்பெற்ற உத்தியோகத்தர்களின் பெயர்கள் யாவை;

(ii) மேற்படி பதவியில் கடமைகளைப் பொறுப்பேற்ற உத்தியோகத்தரொருவர், குறிப்பிட்ட பதவிக்கு உரித்தான, 1989 செத்தெம்பர் மாதத்துக்கான சம்பளத்திற்கு மேலதிகமாக, பிறிதோர் அரச நிறுவனத்திடமிருந்தும் குறிப்பிட்ட மாதத்துக்கான சம்பளத்தை பெற்றுள்ளாரென்பதை அறிவாரா;

(iii) மேற்படி உத்தியோகத்தருக்கு அரசியல் தேவையின்பேரில் வழங்கப்பட்டிருந்த உதவிப் பொது முகாமையாளர் (சேவைகள்) பதவியானது 2007.06.19 ஆம் திகதி முதல் நீதிமன்ற தீர்ப்பினால் இரத்துச் செய்யப்பட்டு அவர் முன்பு வகித்த பதவிக்கு, அதாவது உதவிக் கருத்திட்ட முகாமையாளர் (தரம் vi) பதவிக்கு நியமிக்கப்பட்டமையை அறிவாரா;

(iv) இதற்கேற்ப, 2007.06.19 ஆம் திகதி முதல் 2015 இறுதி வரையில் பதவிக்கு உரித்தல்லாத சம்பளம் மற்றும் கொடுப்பனவாக குறிப்பிட்ட உத்தியோகத்தர் பெற்றுக்கொண்டுள்ள பணத்தொகை யாது;

(v) மேற்படி பணத்தொகையை மீள்அறவிடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

817/ '19

கௌரவ சுசந்த புஞ்சிநிலமே,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) திருகோணமலை மாவட்டத்தின் கல்வி வலயம் 5 இல் "அருகிலுள்ள பாடசாலை - மிகச்சிறந்த பாடசாலை" நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் விருத்தி செய்வதற்காக தெரிவுசெய்யப்பட்டுள்ள பாடசாலைகள் யாவை;

(ii) மேற்படி ஒவ்வொரு பாடசாலையிலும் முன்மொழியப்பட்டுள்ள விருத்திசெய்தல்கள் யாவை;

(iii) மேற்படி ஒவ்வொரு பாடசாலையையும் விருத்திசெய்ய வழங்கப்படுகின்ற குறைந்தபட்சத் தொகை யாது;

(iv) அப்பாடசாலைகளில் இன்றளவில் மேற்கொள்ளப்பட்டுள்ள அபிவிருத்திப் பணிகள் மற்றும் அவற்றுக்காக செலவிட்டுள்ள தொகைகள் யாவை;

(v) திருகோணமலை போன்ற கஷ்டப் பிரதேசங்களுக்கு ஆசிரியர்கள் வருகைதராமைக்கு ஆசிரியர் குடிமனைகளின் பற்றாக்குறை தீவிரமான தாக்கமேற்படுத்தி உள்ளதால் அத்தகைய சிக்கல்களை தீர்த்துவைக்க மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

827/ '19

கௌரவ டக்ளஸ் தேவானந்தா,— கமத்தொழில், கிராமியப் பொருளாதார அலுவல்கள், நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அம்பாறை மாவட்டத்தில் அறக்கொட்டியா (பீடை) தாக்கம் காரணமாகத் தற்போது நெல் பயிரிடப்பட்டுள்ள ஆயிரக்கணக்கான ஏக்கர் பயிர்ச்செய்கை பாதிக்கப்பட்டுள்ளதாகவும்;

(ii) அறுவடை அண்மித்துள்ள காலத்தில், மேற்படி தாக்கம் காரணமாக விவசாயிகள் அதிக பாதிப்பிற்குள்ளாகியுள்ளதாலும்;

(iii) அறக்கொட்டியா தாக்கம் ஏனைய பிரதேசங்களிலும் பரவியுள்ளதாகவும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) அறக்கொட்டியா தாக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கு ஏதேனும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா;

(ii) அறக்கொட்டியா தாக்கம் காரணமாக பாதிக்கப்பட்டுள்ள அம்பாறை மாவட்ட விவசாயிகளுக்கு நட்டஈடொன்றை வழங்குவதற்கான வாய்ப்புக்கள் உள்ளனவா;

(iii) தற்போது படைப் புழு காரணமாக பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு பயிர்ச்செய்கை நட்டத்திற்காக நட்டஈடு வழங்கப்பட்டுள்ளதா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

846/ '19

கௌரவ ஆனந்த அலுத்கமகே,— அமைச்சரவை அந்தஸ்த்தற்ற வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டிலிருந்து இற்றைவரை சுயாதீன தொலைக்காட்சி ஊடக வலையமைப்பு வருடந்தோறும் ஈட்டிய வருமானம் மற்றும் செலவிட்ட பணத்தொகை ஒவ்வொரு வருடத்திற்கிணங்கவும் தனித்தனியாக எவ்வளவு;

(ii) அக்காலப்பகுதிக்குள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை, அவர்களின் பெயர்கள், முகவரிகள், கல்வித் தகைமைகள் மற்றும் பதவிப் பெயர்கள் யாவை;

(iii) மேற்படி காலப்பகுதிக்குள் சுயாதீன தொலைக்காட்சி ஊடக வலையமைப்பில் சுதந்திரமான ஊடக கலையை உருவாக்குவதற்காக மேற்கொண்ட வழிமுறைகள் யாவை;

(iv) சுயாதீன தொலைக்காட்சி ஊடக வலையமைப்பில் குற்றச்சாட்டுகளுக்கு இலக்கானவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகளை குறிப்பிடுவாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

871/ '19

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தம்ரோ நிறுவனம் உள்ளிட்ட மேலும் பல நிறுவனங்களின் தோட்டங்களில் இறப்பர் மரத் தண்டின் மீது வாயு கவசமொன்றை பொருத்தியும் இரசாயனப் பொருட்களை பூசியும் இறப்பர் பால் பெறப்படுகின்றது என்பதையும்;

(ii) இவ்வாறு இறப்பர் பால் பெறக்கூடிய காலம் துரிதமாக முடிவடைந்த பின்னர் அம் மரங்களை அறுத்து பசை உற்பத்தி செய்து இதர கைத்தொழில்களுக்கு பயன்படுத்துவதே இதன் நிர்வாகிகளின் திட்டமென்பதையும்;

(iii) இவ்வாறு இறப்பர் மரங்களை தறித்து அப்புறப்படுத்தப்பட்ட காணிகளில் தால விருட்ச செய்கையினை மேற்கொள்வதே நிர்வாகிகள் திட்டமிட்டுள்ளனர் என்பதையும்;

(iv) இச் செயற்பாடு அதன் ஊழியர்களின் தொழில்களுக்கு அச்சுறுத்தலாக உள்ளதோடு சுற்றுப்புறச்சூழலுக்குச் செய்யும் பெரும் அழிவாக அமையும் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) இந் நிலைமையினை கட்டுப்படுத்துவதற்கு தாமதமின்றி தலையீடு செய்வாரா என்பதை அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

948/ '19

கௌரவ முஹம்மது நசீர்,— போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) காலி பிரதான புகையிரத நிலையத்திலிருந்து மாத்தறையை நோக்கி அமைந்துள்ள கரையோர புகையிரத வீதி இந்திய அரசாங்கத்தின் உதவியுடன் நவீனமயப்படுத்தப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) மேற்படி நவீனமயப்படுத்தலின்போது காலி தலாப்பிட்டிய, பண்டாரநாயக்க பிளேஸ் மற்றும் தக்கியா ஒழுங்கைக்கு இடையில் புகையிரத வீதி ஒதுக்கத்தின் எல்லைக்கு அருகிலுள்ள வீடுகளுக்கும் காணிகளுக்கும் செல்வதற்கான ஒரேயொரு பிரவேச வீதி புகையிரத வீதியால் முழுமையாக மூடப்பட்டு நடைபாதையாக மாறியுள்ளதால், அங்குள்ள குடியிருப்பாளர்களுக்கு போக்குவரத்துச் செய்வதற்குத் தகுந்த பிரவேச வீதி இல்லாத நிலை உருவாகி உள்ளதென்பதையும் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) இந்த குடியிருப்பாளர்களின் அடிப்படைத் தேவையாகக் காணப்படும் பாதுகாப்பான பிரவேச வீதியொன்றை அமைக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

981/ '19

கௌரவ இஷாக் ரஹுமான்,— உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வடமத்திய மாகாணத்தின் பிரதான நகரான அநுராதபுரம் நகருக்கு நிகராக, நாளாந்தம் பெருந்தொகையான மக்கள் நாட்டின் பல்வேறுபட்ட திசைகளுக்கு பயணிக்கும் கேந்திர நிலையமாக தபுத்தேகம நகரம் அமைந்துள்ளது என்பதையும்;

(ii) பெருந்தொகையான குடும்பங்கள் இந்த நகரத்தை அண்மித்து வாழ்கிறார்கள் என்பதையும்;

(iii) இந்நகரம் தபுள்ளை பொருளாதார நிலையத்துக்கு நிகரான வர்த்தக பொருளாதார நிலையம் அமைந்துள்ளதொரு நகரம் என்பதையும்;

(iv) தபுத்தேகம நகரின் பொது பஸ்தரிப்பிடம் பொதுமக்களுக்கு பயன்படுத்த முடியாதவாறு சேதமடைந்துள்ளது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) நாளாந்தம் பெருந்தொகையான பஸ்பயணிகள் நடமாடும் பஸ்தரிப்பிடத்தில் பயணிகளின் தேவைகளை பூர்த்தி செய்வதற்கு உகந்த மலசலகூட முறைமை காணப்படாதுள்ளமை;

(ii) பயணிகளுக்கு உரிய பாதுகாப்புடனான நிழற்குடை காணப்படாதுள்ளமை;

(iii) மழை காலத்தில் பஸ்தரிப்பிட நிலப்பகுதியில் நீர் தேங்கி நிற்பதனால் பயணிகள் அசௌகரியத்துக்கு உட்படும் விடயங்கள் தொடர்பில் இதுவரையில் கவனம் செலுத்தப்படாதுள்ளமை;

என்பதை அவர் அறிவாரா?

(இ) (i) மேற்குறிப்பிடப்பட்டுள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை;

(ii) மேற்படி பஸ்தரிப்பிடத்தை பயணிகளுக்கு சிறந்த சேவையை பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் தயார் செய்து வழங்கும் திகதி யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1031/ '19

கௌரவ (கலாநிதி) பந்துல குணவர்தன,— சுற்றுலாத்துறை அபிவிருத்தி, வனசீவராசிகள் மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2016 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட முன்மொழிவு இலக்கம் 245 இன் படி, கொழும்பு புதிய நகர மண்டபத்திற்கு அருகில் 7000 இருக்கைகளைக் கொண்ட மாநாட்டு மண்டபமொன்றை நிர்மாணிப்பதற்காக ஒதுக்கப்பட்ட ரூபா 3000 மில்லியன் பன்படுத்தப்பட்ட விதம் தொடர்பான விபரமான அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிப்பாரா;

(ii) மேற்படி கருத்திட்டத்தில் கூட்டுச்சேரும் தனியார் துறை முதலீட்டாளர்கள் யாவர் என்பதையும்;

(iii) மேற்படி வரவு செலவுத் திட்ட முன்மொழிவுக்குப் பிரதிபலிப்புக் காட்டிய உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களின் பெயர் பட்டியல் ஒன்றையும் இவர்களது முதலீடுகளின் பெறுமதிகள் அடங்கிய அட்டவணை ஒன்றையும் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1079/ '19

கௌரவ பிமல் ரத்நாயக்க,— பிரதம அமைச்சரும், தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள் குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் உயிரிழந்த மற்றும் காயமடைந்த அனைவரினதும் பெயர் மற்றும் முகவரிகளை குறிப்பிடுவாரா என்பதையும்;

(ii) இன்றளவில் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள நட்டஈடு மற்றும் கொடைகள் தனித்தனியே குறிப்பிடுவாரா என்பதையும்;

(iii) மேற்படி தாக்குதலில் உயிரிழந்துள்ள ஆட்களின் தங்கிவாழ்வோருக்கு நீண்டகால அடிப்படையில் பெற்றுக் கொடுக்க உத்தேசித்துள்ள நிவாரணங்கள் யாவை என்பதையும்;

(iv) தாக்குதலில் காயமடைந்து, நீண்டகால சிகிச்சை அவசியமாகின்ற ஆட்கள் தனித்தனியாக இனங்காணப்பட்டுள்ளார்களா என்பதையும்;

(v) அவ்வாறு இனங்காணப்பட்டுள்ள ஆட்களுக்கு பெற்றுக் கொடுக்கப்படுகின்ற மருத்துவ மற்றும் ஏனைய உதவிகள் யாவை என்பதையும்;

(vi) தாக்குதல் காரணமாக பூரணமாக உபாதைகளுக்கு ஆளானவர்களுக்கான விசேட உதவி வேலைத்திட்டமொன்று இனங்காணப்பட்டுள்ளதா என்பதையும்;

(vii) ஆமெனில், மேற்படி வேலைத்திட்டம் யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1136/ '19

கௌரவ (டாக்டர்) (திருமதி) சுதர்ஷினி பர்னாந்துபுள்ளே,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கட்டான கல்வி வலயத்தில் "அண்மையிலுள்ள பாடசாலை - சிறந்த பாடசாலை" நிகழ்ச்சித்திட்டத்தில் இணைத்துக் கொள்ளப்பட்ட பாடசாலைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) "அண்மையிலுள்ள பாடசாலை - சிறந்த பாடசாலை" நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கட்டான கல்விக் கோட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகள் மத்தியில் அடிக்கல் மாத்திரம் நடப்பட்டு கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கப்படாத பாடசாலைகள் உள்ளனவென்பதை அவர் அறிவாரா என்பதையும்;

(iii) அடிக்கல் மாத்திரம் நடப்பட்டு கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கப்படாத பாடசாலைகளில் அப்பணிகளை நிறைவு செய்யும் சரியான காலப்பகுதியை குறிப்பிடுவாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1139/ '19

கௌரவ கனக ஹேரத்,— நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி மற்றும் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கைக்குரிய நிலப்பிரதேசத்திலும் கடல் எல்லைக்குள்ளும் பெற்றோலிய வளம் அல்லது இயற்கை வாயு காணப்படுவதாக கண்டறியப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அப்பிரதேசங்கள் யாவை என்பதையும்;

(iii) அது தொடர்பான முற்றாய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் கம்பெனிகள் யாவையென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி முற்றாய்வு நடவடிக்கைகளின் தற்போதைய நிலைமை யாதென்பதையும்;

(ii) பெற்றோலிய படிவுகள் தொடர்பில் ஆய்வுகளை மேற்கொண்ட சில வெளிநாட்டுக் கம்பெனிகள், மேற்படி முற்றாய்வு நடவடிக்கைகளை இடையில் கைவிட்டுச் சென்றுள்ளனவா என்பதையும்;

(iii) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2019 திசெம்பர் 20, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

59/ '18

கௌரவ ஹேஷா விதானகே,— போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2010 ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை ஓட்டத்திலிருந்து அகற்றப்பட்ட புகையிரதப் பெட்டிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அவ்வாறு அகற்றப்பட்ட புகையிரதப் பெட்டிகளுள் திருத்திமைத்து ஓட்டத்தில் இணைக்கப்பட்ட புகையிரதப் பெட்டிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) அந்த புகையிரதப் பெட்டிகளை திருத்தியமைத்த நிறுவனத்தின் பெயர் யாதென்பதையும்;

(iv) அதற்கென செலவு செய்யப்பட்ட பணத்தொகை எவ்வளவு என்பதையும்;

(v) ஓட்டப்படுவதிலிருந்து அகற்றப்பட்ட ஏனைய புகையிரத பெட்டிகளை மீளவும் ஓட்டத்தில் இணைப்பதற்கான அமைச்சின் வேலைத்திட்டத்தை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

101/ '18

கௌரவ தயாசிறி ஜயசேகர,— நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2017.12.31 ஆம் திகதியளவில் நீதிமன்றங்களில் தீர்க்கப்படாது உள்ள வழக்குகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி எண்ணிக்கையை நீதிமன்ற வகைப்படுத்தல்களுக்கமைய வெவ்வேறாக குறிப்பிடுவாரா என்பதையும்;

(iii) 5 வருடகாலத்துக்கும் அதிகமாக தீர்க்கப்படாதுள்ள வழக்குகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) 10 வருடங்களுக்கும் அதிகமாக தீர்க்கப்படாதுள்ள வழக்குகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(v) மிக இலகுவாக தீர்க்கப்பட முடியுமெனினும், நீண்ட காலத்தில் தீர்க்கப்படாதுள்ள வழக்குகளை விரைவில் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வாரா என்பதையும்;

(vi) ஆமெனில், இதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

167/ '18

கௌரவ சமிந்த விஜேசிறி,— தொலைத்தொடர்புகள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2017.01.01 ஆம் திகதியிலிருந்து 2017.05.31 ஆந் திகதி வரை சூரியவெவ சர்வதேச கிரிக்கட் மைதானத்தில் நடாத்தப்பட்டுள்ள கிரிக்கட் போட்டிகள் யாவை என்பதையும்;

(ii) அப்போட்டிகள் மூலம் ஈட்டப்பட்ட பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(iii) கிரிக்கட் வீரர்களுக்கு தங்குவதற்கு தேவையான நட்சத்திர வகுப்பிலான ஹோட்டல் ஒன்றை இம் மைதானத்துக்கு அண்டியதாக நிர்மாணிப்பதற்கு அமைச்சு நடவடிக்கை மேற்கொள்ளுமா என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

370/ '18

கௌரவ வேலு குமார்,— அரச தொழில் முயற்சிகள், மலைநாட்டு மரபுரிமைகள் மற்றும் கண்டி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2002 ஆம் ஆண்டில், மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான லுல்கந்துர தோட்டத்தில் தொழில் புரிந்த தோட்டத் தொழிலாளர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) 2000 முதல் 2015 ஆம் ஆண்டு வரை இத்தோட்டத்தில் தொழில் புரிந்து ஓய்வெடுக்கச் செய்யப்பட்ட ஆண் மற்றும் பெண் தோட்டத் தொழிலாளர்களின் எண்ணிக்கை தனித்தனியாக யாது என்பதையும்;

(iii) அவ்வாறு ஓய்வெடுக்கச் செய்யப்பட்ட தொழிலாளர்களில் இன்றளவில் ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதி மற்றும் ஓய்வூதியப் பணிக்கொடை செலுத்தப்படாத தொழிலாளர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iv) அவ்வாறான தொழிலாளர் ஒவ்வொருவரினதும் பெயர், அங்கத்தவர் இலக்கம், ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதி மற்றும் பணிக்கொடை ஊதியத்தின் நிலுவை தனித்தனியாக யாது என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

425/ '19

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) யாழ்ப்பாணம் மாவட்டத்தின் கதுறுகொட வரலாற்றுரீதியான தொல்லியல் இடம் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட திகதி யாது;

(ii) மேற்படி தொல்லியல் இடம் பற்றி மேற்கொள்ளப்பட்ட மதிப்பாய்வுகள் மற்றும் முற்றாய்வுகளுக்கிணங்க முழுமையான அறிக்கையொன்றை சமர்ப்பிப்பாரா;

(iii) அதன் தாதுகோபுர நிலத்தை ஆக்கிரமித்து அத்துமீறிய குடியிருப்பாளர்கள் குடியமர்ந்துள்ளனரா;

(iv) அத்துமீறிய குடியமர்வுகள் காரணமாக தொல்லியல் இடத்திற்கு ஏற்பட்டுள்ள அழிவு பற்றிய முழுமையான அறிக்கையொன்றை சமர்ப்பிப்பாரா;

(v) இந்த தொல்லியல் இடத்தை ஒரு மரபுரிமையாக பாதுகாக்க மேற்கொண்டுள்ள சட்ட நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

501/ '19

கௌரவ ஜயந்த சமரவீர,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2015.02.01 தொடக்கம் 2018.01.31 ஆம் திகதி வரை வழங்குனர்களினால் இலங்கை கடற்படைக்கு விநியோகிக்கப்பட்ட உணவு வகைகள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி உணவை விநியோகித்த வழங்குனர்களின், உப வழங்குனர்களின், நிறுவனங்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி நிறுவனங்களில் போலி ஆவணங்களை சமர்ப்பித்து மற்றும் பெறுகை விதிகளுக்கு புறம்பாக செயற்பட்ட நிறுவனங்கள் யாவை என்பதையும்;

(iv) பெறுகை குழுவின் அனுமதியின்றி பொருட்களை கொள்வனவு செய்வதற்கு பணிப்புரை வழங்கிய உத்தியோகத்தர்கள் மற்றும் பொருட்களுக்கு கட்டளை பிறப்பித்த உத்தியோகத்தர்களுக்கு எதிராக எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(v) சட்டவிரோதமாக கொள்வனவு செய்தமை காரணமாக அரசாங்கத்திற்கு ஏற்பட்ட நட்டம் எவ்வளவென்பதையும்;

(vi) மேற்படி நட்டத்தை குறிப்பிட்ட நபர்கள் மற்றும் நிறுவனங்களிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

563/ '19

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— பொது நிருவாக, அனர்த்த முகாமைத்துவ மற்றும் கால்நடை வளங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) கடந்த சில மாதங்களில் வடமேல் மாகாணத்தில் கடுமையான வறட்சி நிலவியதை அறிவாரா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், அக்காலப்பகுதியில் கல்கமுவ தேர்தல் தொகுதியில் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iii) வறட்சி நிவாரணம் பெற்ற குடும்பங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iv) இவர்களுக்கு வழங்கப்பட்ட நிவாரணப் பொதியிலிருந்த உலர் உணவுப் பொருட்களின் விலைகள் சந்தை விலையை விடவும் அதிகமென்ற குற்றச்சாட்டு எழுந்துள்ளதை அறிவாரா என்பதையும்;

(v) அவ்வாறாயின், அது தொடர்பாக ஆராய்ந்து அவசியமான நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

813/ '19

கௌரவ ரீ. ரஞ்ஜித் த சொய்சா,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு.— (2)

(அ) (i) வேலைவாய்ப்பற்ற பட்டதாரிகளை நேர்முகப் பரீட்சை மூலம் அரசாங்க நிறுவனங்களில் பயிலுநர் பயிற்சிக்காக ஆட்சேர்ப்பதற்காக, தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சரினால் வெளியிடப்பட்ட பத்திரிகை விளம்பரத்துக்கேற்ப, விண்ணப்பப்படிவங்களை அனுப்பிவைத்துள்ள பட்டதாரிகளின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி நேர்முகப்பரீட்சைக்காக தோற்றிய பட்டதாரிகளின் எண்ணிக்கை ஒவ்வொரு மாவட்டத்துக்கும் ஏற்ப வெவ்வேறாக யாது;

(iii) நேர்முகப் பரீட்சையின் பின்னர், பயிற்சிக்காக ஆட்சேர்க்கப்பட்டுள்ள பட்டதாரிகளின் எண்ணிக்கை யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) குறிப்பிட்ட பயிற்சிக்காக பட்டதாரிகளை ஆட்சேர்க்கையில் உள்வாரி மற்றும் வெளிவாரி பட்டதாரிகளாக அவர்கள் வகைப்படுத்தப்பட்டுள்ளார்களா;

(ii) ஆமெனில், ஆட்சேர்க்கப்பட்டுள்ள வெளிவாரி பட்டதாரிகளின் எண்ணிக்கை மற்றும் உள்வாரி பட்டதாரிகளின் எண்ணிக்கை ஒவ்வொரு மாவட்டத்துக்கும் ஏற்ப வெவ்வேறாக யாது;

(iii) வெளிவாரி பட்டதாரிகளுக்கு நியமனக் கடிதங்களை வழங்குகையில் சிக்கலான ஒரு நிலைமை ஏற்பட்டுள்ளதா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

828/ '19

கௌரவ டக்ளஸ் தேவானந்தா,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போது இறக்குமதி செய்யப்படுகின்ற உருளைக்கிழங்குக்கான வரி 20% ஆக குறைக்கப்பட்டுள்ளதென்பனையும்;

(ii) யாழ்ப்பாணத்தில் ஒரு கிலோ உருளைக்கிழங்குக்கான உற்பத்திச் செலவு ரூபா 55/- ஆக காணப்படுகின்ற நிலையில், தற்போது இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோ உருளைக்கிழங்கு சந்தையில் ரூபா 50/- இற்கு விற்கப்படுகின்றதென்பதனையும்;

(iii) பெப்ரவரி 15 ஆம் திகதியிலிருந்து யாழ்ப்பாணத்தில் உருளைக்கிழங்கு அறுவடைக்காலம் ஆரம்பமாகியிருக்கின்ற படியால், இறக்குமதி உருளைக்கிழங்குக்கான வரிக் குறைப்பு காரணமாக உள்ளூர் உருளைக்கிழங்கு செய்கையாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்பதனையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) உள்ளூர் உருளைக்கிழங்கு செய்கையாளர்களின் நன்மை கருதி உள்ளூர் உற்பத்தியின் விற்பனை நிறைவடையும் வரைக்கும் இறக்குமதி உருளைக்கிழங்கின் வரிக்குறைப்பு நீக்கப்பட்டு அவ்வரி அதிகரிக்கப்பட நடவடிக்கை எடுக்கப்படுமாவென்பதனையும்;

(ii) இத்தகைய நடவடிக்கை உள்ளூர் உற்பத்திகளின் (உருளைக்கிழங்கு - வெங்காயம்) அறுவடைக் காலத்திலிருந்து சரியாக ஒரு மாத காலத்திற்கு முன்னரே எடுக்கப்படுமாவென்தனையும்;

(iii) இதற்கென ஒரு நிரந்தரப் பொறிமுறையொன்றை செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமாவென்பதனையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

872/ '19

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கிரிஎல்ல, கடுகம்முல்ல, பஹல கலத்துர, கங்கராவத்த எனும் காணியில் 34 வீடுகளில் வதியும் 39 குடும்பங்களில் ஒரு பகுதி 1955 ஆண்டு தொடக்கமும், எஞ்சிய பகுதி 1978 ஆண்டு தொடக்கமும் நெற்செய்கையில் ஈடுபட்டு துன்பகரமாக வாழ்ந்து வருகின்றார்கள் என்பதையும்;

(ii) இவர்களில் 4 குடும்பங்களுக்கு எதிராக அரசின் ஆட்சியுரிமையை மீளப்பெறும் நடவடிக்கையின் கீழ் இரத்தினபுரி நீதவான் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு அகற்றுவதற்கான தீர்மானம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) இக்குடும்பங்கள் அப்புறப்படுத்தப்பட்டால், இவர்கள் பிள்ளைகளுடன் இடம்பெயரும் கதி ஏற்படுமென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) இந்நிலைமையின் கீழ் மேற்படி 64 ஏக்கர் காணியை கிராமங்களை விரிவாக்குவதற்காக சுவீகரித்து இக்குடும்பங்களுக்கிடையில் உரிய தரத்தில் பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

917/ '19

கௌரவ ஆனந்த அலுத்கமகே,— போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மத்தல விமான நிலையத்தை நிர்மாணிப்பதற்காக செலவிடப்பட்ட பணத்தொகை எவ்வளவு;

(ii) மேற்படி பணம் பெறப்பட்ட தோற்றுவாய்கள் யாவை ;

(iii) மேற்படி விமான நிலையம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட நாளில் இருந்து இற்றைவரை பெற்ற வருமானம் மற்றும் பராமரிப்பு பணிகளுக்காக உறப்பட்ட செலவுகள் வெவ்வேறாக எவ்வளவு;

(iv) இந்த விமான நிலையம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட நாளில் இருந்து இற்றைவரை அங்கு வந்த விமானங்களின் எண்ணிக்கை மற்றும் விமானச் சேவை நிறுவனங்களின் பெயர்கள் யாவை;

(v) இந்த காலப்பகுதிக்குள் மத்தல விமான நிலையம் ஊடாக பயணித்த பயணிகளின் எண்ணிக்கை ஆண்டுவாரியாக வெவ்வேறாக எவ்வளவு;

(vi) மத்தல விமான நிலையத்தை விருத்திசெய்தல் தொடர்பிலான நல்லாட்சி அரசாங்கத்தின் நோக்கு யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா ?

(ஆ) இன்றேல், ஏன்?

935/ '19

கௌரவ முஹம்மது நசீர்,— ஆரம்பக் கைத்தொழில் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொலன்னாவ, அங்கொட, கொதட்டுவ, குமரின் மாவத்தை, இலக்கம் 229/3ஏ என்ற முகவரியில் தற்போது வசித்துவரும் திருமதி பாத்திமா மும்தாஸுக்கு முறையே 21 மற்றும் 18 வயதுகளையுடைய ஊனமுற்ற சகோதரர்கள் இருவர் உள்ளனர் என்பதையும்;

(ii) பிறப்பிலேயே மனநிலை பாதிப்பிற்குள்ளான, பெற்றோரையும் இழந்துள்ள அந்த இருவருக்கும் ஊனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலகத்தினால் மாதாந்தம் வழங்கப்படுகின்ற நிதியுதவி/ மருத்துவ உதவி இதுவரையில் பெற்றுக் கொடுக்கப்படவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) நிலையான வருமானம் இல்லாது நிர்க்கதியான குடும்ப உறுப்பினர்களான மேற்படி ஊனமுற்ற இருவருக்கும் மாதாந்த நிதியுதவி மற்றும் மருத்துவ உதவி என்பவற்றை தாமதமின்றி வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

982/ '19

கௌரவ இஷாக் ரஹுமான்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) "அண்மித்த பாடசாலை சிறந்த பாடசாலை" எனும் வேலைத்திட்டத்தின் கீழ் அநுராதபுரம் மாவட்டத்தின் கெக்கிராவ கல்வி வலயத்தில் அ/விஜிதபுர மகா வித்தியாலயத்தின் அபிவிருத்திக்காக நிதி வழங்கப்படும்போது பல குறைபாடுகள் ஏற்படுவதற்கான காரணம் யாதென்பதையும்;

(ii) ஒதுக்கப்பட்டுள்ள நிதி ஏற்பாடுகளை குறைபாடுகளோ தாமதமோ இன்றி மேற்படி வித்தியாலயத்திற்குப் பெற்றுக்கொடுப்பதற்காக ஏதேனும் முறையியல் வகுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1020/ '19

கௌரவ பிமல் ரத்நாயக்க,— ஆரம்பக் கைத்தொழில் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நடப்பு அரசாங்கத்தினால் 500 ரூபாவிலான பரீட்சைக் கட்டணம் அறவிடப்பட்டு 3771 பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காக சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களை (iii ஆம் தரம்) ஆட்சேர்ப்புச் செய்வதன் பொருட்டு பரீட்சையொன்று நடத்தப்பட்டதென்பதையும்;

(ii) அப்பரீட்சையில் 75,000 இற்கும் அதிகமான விண்ணப்பதாரிகள் தோற்றினர் என்பதையும்;

(iii) அதில் சித்தியடைந்த 1904 பேருக்கு 2017 ஆம் ஆண்டு நியமனங்கள் வழங்கப்பட்டதென்பதையும்;

(iv) எஞ்சிய நபர்களுக்கு 2018 ஆம் ஆண்டு நியமனங்கள் வழங்கப்படுவதாக வாக்குறுதியளிக்கப்பட்டதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) அப்பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் மத்தியிலிருந்து எஞ்சியுள்ள 1867 வெற்றிடங்களுக்காக ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(ii) ஆமெனில் அத்திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1026/ '19

கௌரவ (கலாநிதி) பந்துல குணவர்தன,— மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் உலர்வலய அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) அப்போதைய நிதி அமைச்சரின் "100 நாள் புரட்சி" பற்றிய கூற்றில் குறிப்பிடப்பட்டவாறு கர்ப்பிணி தாய்மாருக்கு ரூபா 20,000/- கொடுப்பனவு வழங்கப்பட்டதா என்பதையும்;

(ii) 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் மேற்படி நலனை பெற்றுக்கொண்ட கர்ப்பிணி தாய்மாரின் பெயர் பட்டியலொன்றை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iii) 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் கர்ப்பிணி தாய்மாருக்கு ரூபா 20,000/- வீதம் வழங்குவதற்கு அரசாங்கத்தினால் உறப்பட்ட மொத்த செலவினம் எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி (i) இல் குறிப்பிடப்பட்ட கூற்றின் 7.29 இல் காட்டப்பட்டுள்ளவாறு வெளியிடப்பட்ட அறிவுறுத்தல் சுற்றறிக்கையின் பிரதியொன்றை சபையில் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?